DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004 | BRAMPTON / MISSISSAUGA 905 457 1700 | MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative — kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com — Ragu Thillainathan Sales Representative

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
Member of National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1544 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday November 7, 2025

# கனடா— சரவணை மக்கள் ஒன்றியத்தின் உதவியுடன் சரவணையில் இயங்கும் மகளிருக்கான தையல் பயிற்சி நிலையத்தில் பயிற்சியை பூர்த்தி செய்தோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கனடா வாழ் பாஸ்டர் ஜெயானந்தசோதி குடும்பத்தினரின் முன்மாதிரியைப் பாராட்டும் பயனாளிகள்



கனடாவில் இயங்கும் சரவணை மக்கள் ஒன்றியத்தின் அனுசரணையில் நடாத்தப்படும் மகளிருக்கான தையல் பயிற்சிப்பாடநெறியினைப் பூர்த்தி செய்தோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று 5.11.2025 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ் மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஜெ. ரஜீவன், வேலணைப்பிரதேச செயலாளர் திரு. அகிலன் மற்றும் யாழ்மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் திரு. அ. சிவபாலசுந்தரன் ஆகியோர் விருந்தி-னர்களாக அழைக்கப்பட்டிருந்தனர். சரவணை கிழக்கு, சரவணை மேற்கு பிரிவு கிராம அலுவலர்களும் வேலணைப்பிரதேச சபை உறுப்பினரும் கலந்து கொ-ண்டிருந்தனர். மேற்படி தையல்பயிற்சி நெறியை நடத்துவதற்கு கனடா வாழ் பாஸ்டர் ஜெயானந்தசோதி அவர்களின் குடும்பத்தினரின் தீவிர ஈடுபாடே காரணம் இந்த வைபவத்தில் எடுத்துரைக்கப்பெற்றது குறிப்பிடத்தக்கது.
(தொடர்ச்சி 6ம் பக்கம்)

# அம்பாறை மாவட்ட நாவிதன்வெளி பிரதேச 06ம் கிராம பாடசாலை மாணவிக்கு. கனடா "உதவும் பொற்கரங்கள்" அமைப்பினால் அவரது கல்வி நடவடிக்கைகளுக்காக துவிச்சக்கர வண்டி மற்றும் மாதாந்த சிறுநிதி வழங்கப்பெற்றது

நாவிதன்வெளி சொறிக்கல்முனை கொலிகுறோஸ் மகா வித்தியாலயத்தில் உயர்தரம் கலைப்பிரிவில் கல்விகற்கும் மாணவி தங்கராசா சுகனிதா 06ம் கிராமத்திலிருந்து சுமார் மூன்றரை கிலோ மீட்டர் தூரத்தில் பாடசாலைக்கு நடையாகச் சென்று தனது உயர் கல்வியை தொடர்ந்து வந்த நிலையில் அவ்வாறு சென்று கல்வி கற்பதில் ஏற்பட்ட. இடையூறுகள் தொடர்பாக உதவும். பொற்கரங்கள் அமைப்பின் ஸ்தாபகரும்,சமூக சேவகருமான விசு கணபதிப்பிள்ளை அவர்களிடம். விடுத்த வேண்டுகோளின் பேரில். கனடாவில் வசிக்கும் சமூக சேவையாளர் கனகலிங்கம் புவி அவர்களின் நிதி உதவியுடன் மாணவிக்கான துவிசக்கர வண்டி மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்காக மாதாந்த கொடுப்பனவும் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டு துவிச்சக்கரவண்டியும்,2026 ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்கான மாதாந்திர கொடுப்பனவும் வழங்கி வைக்கப்பட்டது.
(தொடர்ச்சி 6ம் பக்கம்)




சிறு கற்கள் கொண்டு பெரும் சரித்திரம் படைப்போம்.
சிறு துளி பெரு வெள்ளம்
நாம் ஒன்றாய் சேர்ந்து கட்டி முடிப்போம்..
தமிழ் சமூக மையம் Tamil Community Centre

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
PRIME LEGAL SERVICES
905-334-6851


Vijaya Jewellery
Tamil Mirror
விஜயா ஜுவல்லறி
ஆதரவில்
கவிஞர் தாமரை
கலந்து சிறப்பிக்கும்
VIBRANT HOSPITALITY GROUP
LIVNSTYLE
Is Matter
20th Annual Celebration
Awards Gala 2025
தமிழ் மிரர் பத்திரிகையின்
20வது ஆண்டு விழா
AWARDS
SONGS
DANCE
&
DINNER
LUCKY
EXCLUSIVE STUDIOS
NOVEMBER
15
2025
வேலுண்டு
வினையில்லை
DOOR OPEN @ 4:00 PM
VEDIC CULTURAL CENTRE
4345, 14th Ave, Markham
416 697 0126

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 | Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | உதயன் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# உலகில் போதைப் பொருள் கடத்தலையும், அதன் விற்பனையையும், பாவனையையும் கட்டுப்படுத்த முனையும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாக முன்னேறுகின்றதா?

உலகின் பல நாடுகள் போதைப் பொருள் என்னும் சமூக விரோத நுகர்வுப் பொருளால பல வகையில் பாதிக்கப்படுகின்றன என்பது "வெள்ளிடை மலையா-கத்" தெரிகின்ற ஒரு விடயமாகிவிட்டது. இந்தக் கொடிதான .போதைப் பொருள் கடத்தலையும். அதன் விற்பனையையும், பாவனையையும் கட்டுப்படுத்த முனையும் நாடுகளாக பல தேசங்கள் தற்போது எழுந்து நிற்கின்றன. உலகின் பல நாடுகளில் சமூக விரோதிகள் சட்டவிரோதமாக போதைப் பொருட்களை உற்பத்தி செய்து அந்தந்த நாடுகளுக்கு அவப்பெயர்களை ஏற்படுத்தி விடுகின்றனர். இவ்வாறான பாதகமான செயல்களில் அரசியல்வாதிகளும் சம்பந்தப்பட்டுள்ளார்கள் என்பதை அறிகின்றபோது நிச்சமயமாக சமூக அக்கறை கொண்டவர்கள் "கொதித்து" எழும் நிலையே ஏற்பட வேண்டும். ஆனால் அச்சம் காரணமாக நியாய விரும்பிகள் கூட மௌமாகவே நாட்களைக் கடந்து செல்கின்றார்கள். எனினும் சில தேசங்களின் அரசியல் தலைவர்களும் அமைச்சர்களும் மிகவும் துணிச்சலாக போதைப் பொருள் பாவனை மற்றும் விற்பனையை தடுக்கும் முயற்சி என்னும் "விசப்பரீட்சையில்" தங்கள் துரித நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார்கள். இவ்வாறான நாடுகளில் இலங்கையும் ஒன்றாக கணிக்கப்பெறுவதையும் இலங்கையின் ஜனாதிபதியான அநுர குமாரவும் அவரது அமைச்சர்கள் பெருமக்களும் தீவிரமாக ஈடுபட்டுள்ள மகிழ்ச்சி தரும் செய்திகள் உலகெங்கும் பரவி வருகின்றன.

இலங்கையின் பாடசாலை மாணவர்கள் மற்றும் இளம் தலைமுறையினர் மத்தியில் வேகமாகப் பரவிவரும் ஐஸ் என்ற போதைப்பொருள் குறித்த தலைப்பு அண்மைய நாட்களாக பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. ஐஸ் போதைப்பொருளின் அச்சுறுத்தலை எதிர்த்துப் போராடும் பொருட்டு, நாட்டில் பாடசாலை மாணவர்களை முதன்மையாகக் கொண்டு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படன.
குறிப்பாக தாயகத்தில் தமிழர் பிரதேசங்களில் மாணவர்களும் இளைஞர்களும் போதைப் பொருள் பாவனை மற்றும் விற்பதை ஆகிய பாதகமான விடயங்களுக்கு அடிமையாகி அங்கும் ஆயிரக்கணக்கான இளம் உயிர்கள் "போதைக்கு" பலியாகியுள்ளதையும் செய்திகள் வாயிலாக நாம் அறிந்து வருகின்றோம்.
இலங்கையின் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் புள்ளிவிபரங்களின்படி ஹெரோயின் போதைக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை சுமார் 93 இலட்சம் எனவும் கஞ்சா போதைக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட நான்கு இலட்சம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போதைக்கு சிறுவர்களிடையே வேகமாக பரவிவரும் ஐஸ் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் தொடர்பில் உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்பட்ட புள்ளிவிபரங்கள் எதுவும் முன்வைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எவ்வாறாயினும், ஏற்பட்டுள்ள நாசகார நிலைமையை சமாளிக்கும் வகையில், ஆபத்தை விளைவிக்கும் மருந்துகள் மற்றும் ஆபத்தான போதைப்பொருள் பாவனையை தடுப்பதற்காக ஜனாதிபதி செயலணியொன்றை ஸ்தாபிக்க அரசாங்கம் தீர்மானித்து அதனை நடைமுறைப்படுத்த திடசங்கற்பம் பூண்டுள்ளது அநுர குமாரவின் அரசாங்கமும் அமைச்சரவையும் ஆகவே இது வலுவான சமூகப் பிரச்சனையாக பரிணாமம் எடுக்கும் செயற்பாடாக அமையும் என்று எதிர்பார்க்கலாம்.
போதைக்கு அடிமையானவர்களின் மறுவாழ்வு அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பாகும். அந்த நபர்களை அவர்கள் குழந்தைகளாக இருந்தாலும் சரி பெரியவர்களாக இருந்தாலும் சரி நல்ல மனிதர்களாக சமூகமயமாக்குவது அரசாங்கத்தின் மற்றும் ஒட்டுமொத்த சமூகத்தின் பொறுப்பாகும். இலங்கையில் போதைக்கு அடிமையானவர்களுக்கான வதிவிட சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு சேவைகள் அரசாங்கம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. ஆனால் இந்நாட்டில் போதைக்கு அடிமையானவர்களின் தேவையுடன் ஒப்பிடுகையில், புனர்வாழ்விற்கான அவசியமான வசதிகள் மிகக்குறைவாகவே காணப்படுவதாக இந்தச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள பல தரப்பினர் சுட்டிக்காட்டுகின்றனர். எனவே, இது கவனம் செலுத்த வேண்டிய பாரிய சமூகப் பிரச்சினை ஆகும்.

மேலும் போதைப் பொருள் சட்டவிரோதமாக உற்பத்தி செய்யப்படும் நாடுகளில் பிரேசிலும் ஒன்று என்பதை நாம் அறிவோம். அந்த நாட்டின் ரியோ டி ஜெனீரோ நகரில் போதை பொருள் கும்பலுக்கு எதிராக அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக 2 ஆயிரத்து 500-க்கும் மேற்பட்ட போலீசார் மற்றும் ராணுவ வீரர்கள் அண்மையில் இணைந்து அதிரடி நடவடிக்கையில் ஈடுபட்டனர். அப்போது, போதை பொருள் கும்பலுக்கும், காவலருக்கும் இடையே கடுமையான துப்பாக்கி சண்டை நடந்தது. இதுபற்றி ரியோ நகர கவர்னர் கிளாடியோ கேஸ்டிரோ கூறும்போது, போதை பொருள் கும்பலுக்கு எதிராக ஹெலிகாப்டர்கள் மற்றும் கவச வாகனங்கள் கொண்டு அதிரடி தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில், போதை பொருள் கும்பலை சேர்ந்த சந்தேகத்திற்குரிய நபர்கள் 60 பேர் மற்றும் 4 காவலர்கள் உள்பட 64 பேர் பலியானார்கள். 81 பேர் வரை கைது செய்யப்பட்டு உள்ளனர். ரியோ நகர வரலாற்றில் மிக பெரிய நடவடிக்கையிது என அவர் குறிப்பிட்டார். இதில், 93 துப்பாக்கிகள் மற்றும் 500 கிலோவுக்கும் கூடுதலான போதை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளன. இந்த மோதலில் பலர் காயமடைந்து உள்ளனர். இதனால், அந்த பகுதியே புகை மண்டலம் போல் காட்சியளித்தது. போதை பொருள் பயங்கரவாதம் மற்றும் திட்டமிட்ட குற்றங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இந்நடவடிக்கை தேவையான ஒன்று அதிகாரிகள் தெரிவித்தனர்.
இவ்வாறாக போதைப் பொருள் பாவனைக்கு எதிராக உலகின் பல நாடுகளும் வெளிப்படைத் தன்மையோடு இந்த "ஆபத்தான" முயற்சிகளில் இறங்கவேண்டும் என்பதையே சமூக ஆர்வலர்கள் விரும்புவார்கள் என்பதும் வெள்ளிடை மலையே!


Toronto சிட்டி கவுன்சிலர்
PAUL AINSLIE
WARD 24, SCARBOROUGH-GUILDWOOD
HELP IS AVAILABLE
வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.

குறைந்த கட்டணத்தில் வீட்டுவசதி
விலங்கு சேவைகள்
உயர்மாடி கட்டட சட்டங்கள்
கட்டட அனுமதி பத்திரங்கள்
பிள்ளை பராமரிப்பு சலுகை
அவசர வீட்டு வசதிகள்
தீயணைப்பு சேவைகள்
கழிவுப் பொருட்கள் சேவை
நூலகச் சேவை
மாநகரத் தேர்தல்
மாநகர அனுமதியும் சட்டங்களும்

Ontario Works
வாகனத் தரிப்பிடங்கள்
பூங்காக்கள்
காவல் துறை
பொதுச் சுகாதாரம்
வீதிகள்
ஆதன வரிகள்
பொதுப் போக்குவரத்து
மீள் சுலட்சியும் பசுமை திட்டமும்
மரங்கள்
நீர் விநியோகம்

நியமன அலுவலகம்
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம்
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca
www.paulainslie.com
Ward 24 Scarborough-Guildwood
@Ainslie_Ward24
@cllrainslie
Paul Ainslie (City of Toronto)
www.paulainslie.com 416-396-7222

கனடாவின் பனிக் காலத்தை யாழ்ப்பாணத்தில் நிம்மதியாக கழித்திட......

கனடாவின் பனிக் காலத்தை யாழ்ப்பாணத்தில் நிம்மதியாக கழித்திட விரும்புகின்றீர்களா? யாழ்ப்பாணம் மானிப்பா நகரத்திற்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய அழகிய வீட்டை மாதாந்த அடிப்படையில் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
மேலதிக விபரங்களுக்கு:
Visnu 0094 77515 6292 / 0094 77515 5331
Whats App 44 7957 561 555

Basement for Rent in Scarborough
ஸ்காபுறோவில் Neilson/Sheppard சந்திப்பிற்கு அருகில் ஒரு படுக்கை அறை மற்றும் Kitchen மற்றும் Hall ஆகியவற்றுடன் Basement உடனடியாக வாடகைக்கு உண்டு. ஒரு கார் பார்க்கிங் உண்டு. சிறிய குடும்பம் அல்லது Students ஆகியோருக்கு வழங்கலாம்.
தொடர்புகளுக்கு: 416 358 5859

மிசிசாகா இலங்கை உணவகத்திற்கு சமையல்காரர் தேவை
மிசிசாகா நகரில் இயங்கிவரும் புகழ்பெற்ற உணவகத்திற்கு உடனடியாக அனுபவம் உள்ள சமையல்காரர் தேவை. இலங்கை இந்திய உணவுகள் மற்றும் கறிகள் தயாரிக்கும் அனுபவம் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:- ராஜன் 416 457 8609

# கட்டுக்கோப்பாக வாழ்ந்த எமது சமூகம் இன்று அவ்வாறில்லாமல் இருக்கிறது என்கிறார் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன்

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்



(06-11-2025)

கட்டுக்கோப்பாக வாழ்ந்த எமது சமூகம் இன்று அவ்வாறில்லாமல் இருக்கிறது. சமூகத்தின் மீதான அக்கறை என்பதும் குறைந்து செல்கிறது. ஒரு சிலர் மாத்திரமே எமது சமூகத்தை மீட்டெடுப்பதற்கு அர்ப்பணிப்புடன், அக்கறையுடன் செயற்படுகின்றனர் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

சுவிற்சர்லாந்து உறவுகளும் நித்திலம் கலையகமும் இணைந்து நடத்திய கலைஞர் மதிப்பளிப்பு மற்றும் திரை இசை வெளியீடு என்பன முகமாலை சிவபுர வளாகத்தில் புதன்கிழமை மாலை (05) மூத்த சட்டத்தரணி சோமசுந்தரம் தேவராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஈழத் தமிழ் கலைஞர் ஒன்றியத்தின் உத்தியோகபூர்வ இணைய தளத்தை ஆரம்பித்து வைத்த ஆளுநர் "மகரந்தம்" திரையிசையையும் வெளியிட்டு வைத்தார்.

அத்துடன் தூவானம் திரைப்படத்தில் பணியாற்றிய கலைஞர்கள் மற்றும் ஈழத் தமிழ் ஒன்றிய கலைஞர்களையும் மதிப்பளித்தார். அதனை தொடர்ந்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மிக நீண்ட காலத்தின் பின்னர் வித்தியாசமான நிகழ்வொன்றில் நான் பங்கேற்றிருக்கின்றேன். எமது சமூகத்தின் போக்கு தொடர்பில் அதிகம் கவலை அடைந்து, அதை மாற்றுவதற்கு ஏதாவது செய்யவேண்டும் என்ற துடிப்புள்ள ஒருவராக மருத்துவர் சிவன்சுதன் அவர்களை எனக்கு நீண்ட காலமாகவே தெரியும்.

எமது சமூகம் எவ்வாறு கட்டுக்கோப்புடன் வாழ்ந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். புறக் காரணிகளால் அது மாற்றியமைக்கப் பட்டுள்ளதா அல்லது எமது சமூகமே அவ்வாறு மாறிவிட்டதா என்பது எனக்குத் தெரியவில்லை. எப்படி இருந்த நாம் இப்போது எப்படி இருக்கின்றோம்.

சமூகத்தை கலையால் மீட்டெடுக்கும் முயற்சியில் மருத்துவர் சிவன்சுதன் அவர்கள் ஈடுபட்டுள்ளது பாராட்டத்தக்கது. வடக்கு, கிழக்கு, மலையகம் என தமிழர்கள் வாழும் அனைத்துப் பிரதேசங்களிலும் உள்ள கலைஞர்களை ஒன்றிணைத்தமை மிகப் பெரிய விடயம். எமது சமூகம் எம்மவர்களின் திறமைகளைப் பாராட்டுவது குறைவதுதான். ஆனாலும், மருத்துவர் சிவன்சுதன் போன்றவர்கள் எங்கள் கலைஞர்களைப் பாராட்டுவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சி சிறப்பானது.

இப்போது நல்லது செய்வதற்கு கூடுதலாக எல்லோரும் யோசிக்கின்றார்கள். நல்லது செய்வதில்தான் குறைகண்டு பிடிப்பதற்கு பலர் இருக்கின்றார்கள். ஆனால் தவறான விடயம் தொடர்பில் எவரும் குறைகண்டுபிடிப்பதுமில்லை அதைத் தவறு என்றும் சொல்லுபவர்களும் இல்லை. விமர்சகர்களும் இப்போது மாறிவிட்டார்கள் என்றே எண்ணத் தோன்றுகின்றது. எது எப்படியிருப்பினும், எமது சமூகத்தை வழிப்படுத்துவதற்கு கலைஞர்கள் எடுத்துக்கொள்ளும் வகிபாகம் மிகவும் பொறுப்புமிக்கது. அதை அவர்கள் சிறப்பாகச் செய்ய வாழ்த்துகிறேன்.என தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலை பீடாதிபதி சி.ரகுராம் மற்றும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முன்னாள் பீடாதிபதி சு.பரமானந்தம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக வும் கலந்துகொண்டிருந்தனர்.







# தேசிய ரீதியில் சாதனை படைத்து தங்கம் வென்ற மன்னார் பேசாலை பற்றிமா மத்திய மகா வித்தியாலய மாணவிக்கு கௌரவம்



(06-11-2025)

பாடசாலைகளுக்கு இடையிலான 38 ஆவது தேசிய மட்ட போட்டியில் பங்கு பற்றி தேசிய ரீதியில் சாதனை படைத்த மன்னார் பேசாலை பற்றிமா மத்திய மகா வித்தியாலய மாணவியை கௌரவிக்கும் நிகழ்வு 6ம் திகதி அன்றைய தினம் வியாழக்கிழமை காலை இடம்பெற்றது.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவின் பேசாலை மன்/பற்றிமா மத்திய மகா வித்தியாலய மாணவி வில்சன் வில்சியா (14 வயது) டயகம ராஜபக்ச விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற பாடசாலைகளுக்கு இடையிலான 38 வது தேசிய மட்ட போட்டியில் கலந்து கொண்டு சாதனை படைத்துள்ளார்.

14 வயதுக்குட்பட்ட உயரம் பாய்தல் போட்டியில் தேசிய மட்டத்தில் புதிய சாதனையாக 1.56 மீட்டர் பாய்ந்து தனது புதிய சாதனையை நிலை நாட்டி தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

ஏற்கனவே 2023 ஆம் ஆண்டு உயரம் பாய்தலில் தேசிய மட்ட சாதனையாக 1.55 மீற்றர் உயரத்தை வத்தளை சர்வதேச பாடசாலை ஒன்றின் மாணவி நிலை நாட்டியிருந்தார்.

குறித்த சாதனையை முறியடித்து மன்னார் பேசாலை யைச் சேர்ந்த மன்/பற்றிமா மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் வில்சன் வில்சியா என்ற மாணவி புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

தேசிய சாதனை படைத்த மாணவியை கௌரவிக்கும் நோக்கில் 6ம் திகதியன்று குறித்த பாடசாலை சமூகம் மற்றும் கிராம மக்கள் மாணவியை மன்னார் நுழைவுப் பாலத்தில் இருந்து சுமார் 15 கிலோமீட்டர் தூரம் வாகன பவனியாக பேசாலை வரை வரவேற்று பேசாலை பிரதான சந்தியில் இருந்து பேண்ட் வாத்தியம் மற்றும் நாட்டுப்புற நடன நிகழ்வுடன் வரவேற்று பாடசாலை அரங்கில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த பாடசாலையின் அதிபர் மெரின் சோசை நெல்சன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பாடசாலை பிரதி அதிபர் உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள்,மற்றும் பேசாலை கிராம மக்கள், பேசாலை புனித வெற்றி நாயகி அன்னை ஆலயத்தின் பங்கு தந்தையர்கள், அருட் சகோதரிகள் கூட்டாக இணைந்து சாதனை மாணவி, அவரது பெற்றோரையும் கௌரவித்து பொன்னாடை போர்த்தி மலர் மாலை அணிவித்து அன்பளிப்புகளை வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




**Tamilthakaval.org**

**ஒரு இலவச சேவை -- A Free Service**



**இணையத்தளம்: www.tamilthakaval.org**

இவ் இணையத்தளம் உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழ் மக்கள் தங்களுடைய உற்றார், உறவினர்களின் பிரிவுத் துயரச்செய்திகள், நினைவஞ்சலிகள் முதலியவற்றை எப்பொழுதும் ஏவ்வித சந்தாவுமின்றி இலவசமாகப் பிரசுரித்து அறிவித்தல் தரும் நோக்கத்தில் தாபிக்கப்பட்ட தொன்றாகும்.

மேலும் பல்வேறு முக்கிய செய்திகளைக்கூட பகிர்ந்து கொள்ளும் வசதிகளும் இதில் தரப்பட்டுள்ளன.

செய்திகளைப் பிரசுரிப்பதற்கான விண்ணப்ப படிவமும், நிரப்புவதற்கான விதிமுறைகளும் விவரமாக இணையத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

உங்கள் வசதிக்கமைய செய்திகளை "info@tamilthakaval.org" என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பிவைக்கலாம்.

மேலதிக தகவல்களுக்கு 1-866-300-1765 என்ற தொலைபேசி இலக்கத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு இணையத்தளம் tamilthakaval.org பார்வையிடவும்.

இந்த இணையத்தளத்தை சில தொண்டர்கள் ஒரு சமூக சேவையாக கருதி பொறுப்புடன் நன்கு நடாத்தி வருகின்றார்கள்.

இவர்கள் இப்பணியை வெற்றிகரமாக தொடருவதற்கு ஈழத்தமிழர்களாகிய உங்களின் ஆதரவு மிகவும் இன்றியமையாதது.

உங்களால் இயன்றவரை செய்திகளை உடனுக்குடன் தெரிவித்து இந்த இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு உதவி செய்து இச்சமூக சேவையை மேன்மேலும் மேன்மைபடுத்த உதவுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தமிழ் தேசிய மக்கள் முன்னணியின், யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர் ஒருவரது முன்மாதிரியான சமூகம் சார்ந்த செயலுக்காக குவியும் பாராட்டுக்கள்!

பு. கஜிந்தன்

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின், யாழ். மாநகர சபை உறுப்பினராகிய ரத்னம் சதீஸ், மாநகர சபையினால் நான்கு வருடங்களுக்கும் வழங்கப்படும் அவருக்கான சம்பள கொடுப்பவை சமூக சேவைக்காக பயன்படுத்துவதற்காக முன்வந்துள்ளார்.

அந்தவகையில் ஒவ்வெரு மாதமும், 24 வட்டாரங்களை சேர்ந்த மாணவர்களுக்கும் இந்த கொடுப்பவை பகிர்ந்தளிப் பதற்கு திட்டமிட்டுள்ளார்.

அதனடிப்படையில் மாநகர சபையால் வழங்கப்பட்ட கொடுப்பனவுடன் தனது சொந்தப் பணம் இருபதாயிரம் ரூபாவையும் சேர்த்து, கற்றல் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக 100 மாணவர்களுக்கு வவுச்சர்கள் வழங்கியுள்ளார். இந்த வவுச்சர்கள் நேற்றையதினம் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், மாநகரசபை உறுப்பினர்கள் எ.ஜாமினி, எ.மதுசிகான், கட்சி உறுப்பினர்களான நிக்கோலா, சுதர்மன் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கு வவுச்சர்களை வழங்கியுள்ளனர்.







# தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவரும் நல்லூர் பிரதேச சபையின் உப தவிசாளருமான நபரின் சகோதரன் போதை பொருளுடன் கைது!

நல்லூர் பிரதேச சபையின் உப தவிசாளரும் தமிழரசுக் கட்சியைச் சேர்நதவருமான நபரின் சகோதரன் போதை பொருளுடன் யாழ்ப்பாண பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் கோண்டாவில் பகுதியில் வைத்து 3ம் திகதி திங்கட்கிழமை அன்றையதினம் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் மிக நீண்டகாலமாக போதைபொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்ததாகவும் சாட்சிகள் பொலிசாரிடம் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக் கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். அவரை விடுவிப்பதற்கு பொலிஸ் தரப்போடு பணப் பேரம் பேசப்பட்டதாகவும் எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

# உடுவில் பேருந்து நிலையத்திலிருந்து முதியவரின் சடலம் மீட்பு!

உடுவில் பொது நூலகத்துக்கு அருகாமையில் உள்ள பேருந்து நிலையத்தில் இருந்து முதியவர் ஒருவரது சடலம் மீட்கப்பட்டது. மாவை கலட்டி, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை என்ற முகவரியைச் சேர்ந்த சின்னன் தங்கராசா (வயது 74) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த முதியவர் அப்பகுதியில் கடந்த மூன்று வருடங்களாக யாசகம் பெற்று வந்த நிலையில் 5ம் திகதி அன்றையதினம் சடலமாக மீட்கப்பட்டார். சடலத்தை மீட்ட சுன்னாகம் பொலிஸார் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வவுனியாவில் கொலை செய்யப்பட்ட நிலையில் இளம் குடும்பப் பெண்ணின் சடலம் மீட்பு!



வவுனியா பூம்புகார் பகுதியில் கொலை செய்யப்பட்ட நிலையில் இளம் குடும்பப் பெண்ணின் சடலம் ஒன்றை போலீசார் மீட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் 4ம் திகதியன்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது. இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, குறித்த பெண் அவரது கணவர் மற்றும் குழந்தையுடன் வீட்டில் இருந்து உள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் உயிரிழந்த பெண்ணின் தாயார் பணி நிமித்தம் வெளியில் சென்றுவிட்டு மாலை வீட்டுக்கு சென்று பார்த்தபோது தனது மகள் சடலமாக கிடந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளார்.

சம்பவத்தில் இ.சிந்துஜா (வயது 25) என்ற ஒரு பிள்ளையின் தாயே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலத்தின் கழுத்து பகுதியில் கூரிய ஆயுதத்தால் வெட்டப்பட்ட மையால் குறித்த மரணம் நிகழ்ந்திருக்கலாம் என போலீசார் சந்தேகிக்கின்றனர்.

இதேவேளை பெண்ணின் கணவரும் அவரது இரண்டு வயதான பெண் குழந்தையும் மாயமாகியுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக ஈச்சங்குளம் பொலிசாருக்கு தெரியப் படுத்தப்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.




# விஞ்ஞான புனைகதை எழுதுவதில் தேசிய ரீதியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற யாழ் மண்ணின் மாணவச் செல்வங்கள்!






விஞ்ஞானத்தை பிரபல்யப்படுத்தும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் தேசிய விஞ்ஞான மன்றானது உலக விஞ்ஞான தினத்தையும், விஞ்ஞானம் தொடர்பான போட்டிகளில் தேசிய ரீதியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு வைபவத்தையும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் கேட்போர் கூடத்தில் 04.11.2025 அன்று நடத்தியது.

இதில் விஞ்ஞான புனைகதை எழுதுவதில் முதலாம் இடத்தை வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையை சேர்ந்த ரூபிகா அருந்தவமும், இரண்டாம் இடத்தை சாவச்சேரி இந்து கல்லூரியைச் சேர்ந்த கேசிகா தயாகுமாரனும், மூன்றாம் இடத்தினை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த அட்சயா ஞானசந்திரனும் பெற்றுக்கொண்டனர்.

தேசிய விஞ்ஞான மன்றத்தின் தலைவர் கலாநிதி சுடத் சமரவீர தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் பேராசிரியர் கிருஷாந்த அபேசேன பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தும் இருந்தார்.

# கனடாவில் — சரவணை மக்கள் ஒன்றியத்தின் உதவியுடன் சரவணையில் இயங்கும் மகளிருக்கான தையல் பயிற்சி நிலையத்தில் பயிற்சியை பூர்த்தி செய்தோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு





கனடாவில் இயங்கும் சரவணை மக்கள் ஒன்றியத்தின் அனுசரணையில் நடாத்தப்படும் மகளிருக்கான தையல் பயிற்சிப்பாடநெறியினைப் பூர்த்தி செய்தோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு 5-11-2025 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ் மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஜெ. ரஜீவன், வேலணைப்பிரதேச, செயலாளர் திரு. அகிலன் மற்றும் யாழ்மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் திரு. அ. சிவபாலசுந்தரன் ஆகியோர் விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தனர்.

சரவணை கிழக்கு, சரவணை மேற்கு பிரிவு கிராம அலுவலர்களும் வேலணைப்பிரதேச சபை உறுப்பினரும் கலந்து கொண்டிருந்தனர். நிகழ்வின் முதன்மை உரையாற்றிய முன்னாள் அரசாங்க அதிபர் சிவபாலசுந்தரன் இந்த தையல்பயிற்சியின் மூலம் சிறந்த தொழில் முனைவோராகி முன்னேற முயலவேண்டும் எனவும் சரவணை மக்கள் ஒன்றியம் கனடா இவ்வூர் இளைஞர்கள் யுவதிகளுக்கு தொழில் சார் பயிறசிளை வழங்கும் ஒரு படியாக இந்த திட்டத்தை செயல்படுத்தவருகிறத என்று கூறியதுடன் இவ்வாறான முயற்சிகளை இங்குள்ள இளைய சமூகத்தினர் சரி வரப்பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.

தொடர்நது உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் திரு. ரஜீவன் அவர்கள் இந்த முயற்சியைப்பாராட்டியதுடன் இங்கு பயிற்சி பெற்ற யுவதிகள் தங்கள் தொழிற்துறையை விரிவுபடுத்தி சர்வதேச சந்தைவாய்ப்ப பெறவேண்டும் என்றும் அதற்காக சமூக ஊடகங்களை பயன்படுத்தும் முறையையும் கற்றுக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இங்கு காணப்பெறும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.

# அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிரதேச 06ம் கிராம பாடசாலை மாணவிக்கு கனடா உதவும் பொற்கரங்கள் அமைப்பினால் அவரது கல்வி நடவடிக்கைகளுக்காக துவிச்சக்கர வண்டி மற்றும் சிறுநிதி வழங்கப்பெற்றது




நாவிதன்வெளி சொறிக்கல்முனை கொலிகுறோஸ் மகா வித்தியாலயத்தில் உயர்தரம் கலைப்பிரிவில் கல்விகற்கும் மாணவி தங்கராசா சுகனிதா 06ம் கிராமத்திலிருந்து சுமார் மூன்றரை கிலோ மீட்டர் தூரத்தில் பாடசாலைக்கு நடையாகச் சென்று தனது உயர் கல்வியை தொடர்ந்து வந்த நிலையில் அவ்வாறு சென்று கல்வி கற்பதில் ஏற்பட்ட. இடையூறுகள் தொடர்பாக உதவும். பொற்கரங்கள் அமைப்பின் ஸ்தாபகரும், சமூக சேவகருமான விசு கணபதிப்பிள்ளை அவர்களிடம். விடுத்த வேண்டுகோளின் பேரில்.

கனடாவில் வசிக்கும் சமூக சேவையாளர் கனகலிங்கம் புவி அவர்களின் நிதி உதவியுடன் மாணவிக்கான துவிசக்கர வண்டி மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்காக மாதாந்த கொடுப்பனவும் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டு துவிச்சக்கரவண்டியும், 2026 ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்கான மாதாந்திர கொடுப்பனவும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், உதவும் பொற்கரங்கள் அமைப்பின் தாயக நிர்வாகியுடன் நாவிதன்வெளி பிரதேச சமூக சேவை உத்தியோகத்தர் குரூஸ் குணரத்தினம் அவர்களும், ஓய்வு பெற்ற உதவிக் கல்வி பணிப்பாளர் கண வரதராஜன் அவர்களும். கலந்து கொண்டு இவற்றை வழங்கி வைத்தனர். உதவியை வழங்கிய சமூக சேவையாளர் கனகலிங்கம் புவி மற்றும் அவரது குடும்பத்தினருக்கும். தொடர்ச்சியாக கல்வி நடவடிக்கை, மற்றும் பல்வேறுபட்ட உதவிகளை மக்களுக்கு வழங்கி வருகின்ற. தமிழ் பணிசெம்மல்,சமூக சேவையாளர் விசு கணபதிப்பிள்ளை அவர்களுக்கும். மாணவி, குடும்பத்தினராலும் மனமார்ந்த நன்றிகள் தெரிவிக்கப்பட்டது.

# யாழ்ப்பாணத்தில் சட்டவிரோதமாக நிதி சேகரிக்க வந்த கும்பல் பொலிஸாரால் விரட்டியடிப்பு!

நிதி சேகரிப்புக்காக யாழ்ப்பாணம் வந்த கும்பல் ஒன்று பொலிஸாரால் 6ம் திகதி வியாழக்கிழமை அன்றையதினம் விரட்டியடிக்கப்பட்டது.

இது குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த குழுவில் உள்ளவர்கள் தங்களின் பிள்ளைகளுக்கு உடலில் பாதிப்புகள் உள்ளதாகவும், அவற்றுக்கு சிகிச்சை செய்வதற்கு பாரியளவு நிதி தேவை என்றும் பொய்கூறி வெவ்வேறு மாவட்டங்களில் தொடர்ச்சியாக நிதி சேகரிப்பில் ஈடுபட்டு வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அந்தவகையில் குறித்த கும்பல் 6ம் திகதி அன்றையதினம் யாழ்ப்பாணத்திற்கு வந்தது. இது குறித்து பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த குழுவில் இருந்த மூவரையும் அழைத்துச் சென்ற யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

அவர்கள் ஒவ்வொருவரும் முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் இனிமேல் இவ்வாறான சட்டவிரோத நிதி சேகரிப்பில் ஈடுபடக்கூடாது என கடுமையாக எச்சரித்த பின்னர் பொலிஸார் அவர்களை விடுவித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

## PATHWAY TO WELLENESS CLINIC successfully celebrates the Grand Opening of it's newest location.

# ரொறன்ரோ வாழ் மக்களால் நன்கு அறியப்பெற்ற PATHWAY TO WELLENESS CLINIC நிலையத்தின் புதிய சிகிச்சை நிலையத் திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது.









கடந்த பல வருடங்களாக கென்னடி-பின்ச் சந்திப்பிற்கு அருகில் இயங்கிவந்த, ரொறன்ரோ வாழ் மக்களால் நன்கு அறியப்பெற்றதும் டாக்டர் நெலன்ரைன் யேசுதாசன் அவர்களை தலைமை வைத்தியராகக் கொண்டதுமான **PATHWAY TO WELLENESS CLINIC** நிலையத்தின் புதிய சிகிச்சை நிலையத் திறப்பு விழா கடந்த 2ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று மார்க்கம் நகரில் சிறப்பாக நடைபெற்றது.

7595 **Markham Road Unit 19 Markham -L3S 0B6** என்னும் விலாசத்தில் அமைந்து சிகிச்சை வளாகத்தின் திறப்பு விழாவிற்கு மார்க்கம்-தோர்ன்ஹில் தொகுதியின் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்டார்.

விசேட விருந்தினராக மார்க்கம் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின் பிரதிநிதியான **Deepak Talreja** அவர்களும் கலந்து கொண்டார். அழைக்கப்பெற்ற பல நண்பர்கள் - வாடிக்கையாளர்கள்- வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் என சிகிச்சை வழங்கும் வளாகம் அன்று விருந்தினர்களால் நிறைந்து காணப்பெற்றது.

டாக்டர் நெலன்ரைன் யேசுதாசன் அவர்களும் அவரது துணைவியாரும் இணைந்து தொடர்ந்து வசதியான ஒரு இடத்தில் அவர்களது சிகிச்சை நிலையத்தை வெற்றிகரமாக நடத்த வேண்டும் என அனைவரும் வாழத்திச் சென்றனர்.

வாழ்த்துத் தெரிவிக்க விரும்புவோர் 437.349.8404 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.


# Thana Insurance Inc

### T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

### PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

### NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

### 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker

THANA INSURANCE Inc.




Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road , unit D218, Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."

# மீண்டும் ஓர் ஓய்வூதியர்?

## - யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -



முன்னாள் நீதிபதி இளஞ்செழியனுக்கு லண்டனில் கிடைத்த வரவேற்பும் அங்கு அவர் ஆற்றிய உரைகளும் சமூகவலைத்தளங்களில் பரவலாகப் பகிரப்படுகின்றன. ஒரு மாகாண சபைத் தேர்தல் நடக்கலாம் என்ற சந்தேகங் கலந்த எதிர்பார்ப்பு அதிகரித்திருக்கும் ஒரு சூழலில், இளஞ்செழியனைப் போன்ற ஒருவரை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்று விரும்பிய பலரும் இப்பொழுது உற்சாகமாகக் காணப்படுகிறார்கள்.

அதேசமயம் தமிழ்த் தேசிய அரசியலை விமர்சனத்தோடு அணுகும் இடதுசாரி மரபில் வந்த மூத்த பத்திரிகையாளராகிய தனபாலசிங்கம் அதற்கு எதிராக முகநூலில் கருத்து தெரிவித்துள்ளார். ஏற்கனவே ஒரு நீதிபதியைக் கொண்டு வந்து பட்ட பாடு போதும் இனியும் ஒரு நீதிபதியைக் கொண்டு வந்து வடமாகாண சபையைச் சீரழிக்கக் கூடாது என்று விமர்சித்துக் கொண்டிருப்பவர்கள் அவருடைய கருத்தை ஆதரிக்கின்றார்கள்.

இளஞ்செழியனுக்கு அப்படி ஒரு விருப்பம் இருக்கிறதா இல்லையா என்று தெரியாது. ஆனால் அவருடைய சகோதரர் - அவர் ஏற்கனவே தமிழரசுக் கட்சியின் தீவுப்பகுதிக் கிளையில் பொறுப்பில் இருந்தவர் - அவர் தனக்கு நெருக்கமான நண்பர்களுக்கு ஊடாக தமையனை முதலமைச்சராக்கி விட வேண்டும் என்ற கனவோடு செயல்படுவது யாழ்ப்பாணத்தில் எல்லாருக்கும் தெரிந்த விடயம்.

ஆனால் தமிழரசுக் கட்சி இந்த விடயத்தில் இளஞ்செழியனுக்கு சாதகமாகச் சிந்திக்கும் வாய்ப்புகள் குறைவு. ஏனென்றால் முதலாவதாகவும் முக்கியமானதாகவும் சுமந்திரன் இளஞ்செழியன் உள்ளே வருவதை விரும்பவில்லை என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதில் ஒரு துறைசார் போட்டி இருக்க முடியும். விக்னேஸ்வரன் முதலமைச்சர் வேட்பாளராக முன் நிறுத்தப்பட்ட பொழுது மன்னாரைச் சேர்ந்த தமிழரசுக் கட்சி உறுப்பினர் ஒருவர் அப்பொழுது கட்சிக்காரர்களிடம் சொன்னார் "அவரைக் கொண்டு வராதீர்கள். அவர் ஒரு நீதிபதி. நீங்கள் எல்லாம் வழக்கறிஞர்கள். அவர் உங்களுடைய சொல்லைக் கேட்க மாட்டார்" என்று. இது இளஞ்செழியனுக்கும் பொருந்துமா?

செழியன் தன்னை உணர்ச்சி வசப்படும் ஒருவாராகவே எப்பொழுதும் வெளிக்காட்டி வந்திருக்கிறார். அவருடைய மெய்க்காவலர் நல்லூர் சந்தியில் சுட்டுக் கொல்லப்பட்ட போதும், மேடைகளில் அவர் பேசும் போதும் அவர் உணர்ச்சிவசப்படுகின்ற, தன் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாத, ஒருவராகத்தான் வெளித்தெரிய வந்திருக்கிறார். இப்படி உணர்ச்சிவசப்படும் ஒருவரை ஒரு பொறுப்பான பதவியில் நிறுத்துவது சரியா என்ற கேள்வி தமிழரசுக் கட்சிக்குள் மட்டுமல்ல அக்கட்சிக்கு வெளியேயும் உண்டு. நீதியானவர்கள் தலைவர்களாக வருவது நல்லது. ஆனால், எல்லா நீதிபதிகளும் தலைவர்கள் இல்லை.

தமிழரசுக் கட்சி அவரை உள்ளே கொண்டு வர விரும்பவில்லை என்றால் சில சமயம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உருவாக்கி வைத்திருக்கும் அணி அதை விரும்புமா? தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமையில் உருவாக்கப்பட்டிருக்கும் தமிழ் தேசியப் பேரவைக்குள் ஏற்கனவே தவறாசா அணி உண்டு. இளஞ்செழியன் தீவுப் பகுதியைச் சேர்ந்தவர். தவறாசா அணியானது ஜனாதிபதித் தேர்தலில், பொது வேட்பாளரை நிறுத்தும்போது தவறாசாவை கொண்டு வர வேண்டும்; தீவுப்பகுதி ஆளைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டது. இளஞ்செழியனை முதலமைச்சராகக் கொண்டுவர வேண்டும் என்ற விருப்பமும் தவிப்பும் அவர்களிடம்தான் அதிகம் உண்டு. இதில் வெளிப்படையான பிரதேசப் பற்று உண்டு. ஆனால் அந்த அணி தமிழரசுக் கட்சியிலிருந்து விலகியபோது இளஞ்செழியனின் சகோதரர் அந்த அணியுடன் இணைந்து வெளியே வரவில்லை என்பதை இங்கு உற்றுக் கவனிக்க வேண்டும்.

லண்டனில் உரை நிகழ்த்தும் போது, இளஞ்செழியன் குமார் பொன்னம்பலத்தைப் போற்றி பேசியிருக்கிறார். அதில் உண்மை உண்டு. அவர் நீதிபதியாக வருவதற்கு முன்பு ரவிராஜும் அவரும் அரச படைகளின் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவான வழக்குகளில் ஈடுபட்டவர்கள் என்பது உண்மை. அனைத்துலக மன்னிப்புச் சபை போன்ற அமைப்புக்களோடும் குமார் பொன்னம்பலம் போன்ற செயற்பாட்டாளர்களோடும் இணைந்து காசு வாங்காமல் வழக்காடியவர்கள் என்பதும் உண்மை.லண்டனில் பேசும்போது குமார் பொன்னம்பலத்தை உயர்த்திப் பேசியதன் மூலம் செழியன் ஏதாவது அரசியல் சமிக்ஞயை வெளிப்படுத்துகிறாரா?

கட்சிகளின் நோக்கு நிலையில் இருந்து பார்த்தால் செழியன் தமிழரசுக் கட்சிக் கூடாக வருகிற வாய்ப்புகள் குறைவு. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைத் தான் எதிர்பார்க்கலாம். எனினும், இந்த விடயத்தில் கட்சி நோக்கு நிலைகளுக்குமப்பால் பொதுவான தமிழ்த்தேசிய நோக்குநிலையில் இருந்து சில விடயங்களை ஆயமாகப் பார்க்க வேண்டியுள்ளது.

கட்சிகள் முதலமைச்சர் பதவிக்கு ஏன் கட்சிக்கு வெளியே போய் ஆட்களைத் தேட வேண்டி வருகிறது? ஏனென்றால் கட்சிக்குள் பொருத்தமான ஆட்கள் இல்லை என்று கட்சிகள் நம்புகின்றனவா? கட்சிக்குள் ஏன் பொருத்தமான ஆட்கள் இல்லாமல் போனார்கள்? ஏனென்றால் கட்சிகள், கட்சிகளுக்கு இருக்க வேண்டிய கட்டுக்கோப்பான கட்டமைப்புகளோடு இல்லை என்பதால்தான். குறிப்பாக உள்ளதில் பெரிய கட்சியான தமிழரசுக் கட்சி இப்பொழுதும் நீதிமன்றத்தில் தான் நிற்கின்றது. பதில் தலைவரும் பதில் செயலாளரும்.

கட்சிக்கு வெளியிலிருந்து ஆளுமைகளை பரஸூட்டில் இறக்குவது என்பது சம்பந்தரின் காலத்திலும் காணப்பட்ட ஒரு நிலைமைதான். சம்பந்தர்கூட கடந்த வருடமாகண சபைத் தேர்தலின்போது கட்சிக்குள் இருந்து ஒருவரைக் கொண்டுவர முடியவில்லை. விக்னேஸ்வரனைக் கொண்டு வந்தபோது சம்பந்தர் சொன்னார் "அவர் ஒரு ஹை ப்ரொபைல்" என்று. மாகாண முதலமைச்சர் பதவி என்பது ஒரு சட்டமன்றத்துக்குப் பொறுப்பான பதவி. அதில் இருப்பவர் தூதரகங்களையும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளையும் சந்திக்க வேண்டியிருக்கும். அந்த மாகாணத்தின் அரசியல் அதிகார முகம் அவர். அதற்கு விக்னேஸ்வரனைப் போன்ற ஒரு ஹை ப்ரொபைலைத்தான் கொண்டுவர வேண்டும் என்று சம்பந்தர் நியாயம் சொன்னார்.

சம்பந்தரின் வார்த்தைகளில் எது "ஹை ப்ரொபைல்"? படித்துப் பட்டம் பெற்று, அரசாங்கத்தில் உயர் பதவியை வகித்து, ஓய்வு பெற்ற ஒருவரா?

ஆனால் விக்னேஸ்வரன் சம்பந்தர் எதிர்பார்த்ததுபோல அவருக்கு விசுவாசமான ஒரு ப்ரொபைல் ஆக இருக்கவில்லை. மாறாக அவர் சம்பந்தருக்கு எதிராகத் திரும்பினார். அதனால் மாகாண சபைக்குள் அவரைச் சுமந்திரன் சுற்றி வளைத்தார். எனினும் விக்னேஸ்வரனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர சுமந்திரன் அணி முயற்சித்தபோது, சம்பந்தர் சித்தார்த்தனை அழைத்து பின்வரும் பொருள்பட சொன்னார் "அங்கு போய் சமரசம் செய்யுங்கள். தமிழரசுக் கட்சியும் தோக்கக் கூடாதுவிக்னேஸ்வரனும் தோக்கக் கூடாது" என்று.

எனினும் விக்னேஸ்வரன் ஒரு கட்டத்தில் கட்சியை விட்டு நீங்கி புதிய கட்சியைத் தொடக்கி தன்னால் ஒர் ஆசனத்தையாவது வெல்ல முடியும் என்று நிரூபித்தார். ஆனால் தமிழ் அரசியலில் தமிழரசுக் கட்சிக்கு நிகரான ஒரு மாற்று ஏற்பாடாக அவரால் மேலுயர முடியவில்லை. சம்பந்தரின் "ஹை ப்ரொபைல்" எதிர்பார்த்த உச்சியை அடையவில்லை. சம்பந்தரும் ஒரு தோல்வியுற்ற தலைவராக,மக்கள் மத்தியில் "லோ புரோபைலாக" இறந்து போனார்.

இந்த விடயத்தில் சம்பந்தரின் ஆவி பேசினால், ஒரு விளக்கத்தைக் கூறக்கூடும். ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரான ஒரு காலகட்டத்தில், ஆயுதப் போராட்டமானது மிதவாதக் கட்சிகளை அரங்கில் இருந்து அகற்றியிருந்த ஒரு பின்னணிக்குள், மிதவாதக்கட்சி ஒன்றை மீளக்கட்டி எழுப்புவதில் இருக்கக்கூடிய சவால்களின் அடிப்படையில் வெளியில் இருந்து பிரமுகர்களை உள்ளே கொண்டு வர வேண்டிய ஒரு தேவை தனக்கு இருந்தது என்று சம்பந்தர் தனது செயலை நியாயப்படுத்தக்கூடும். ஆனால் சம்பந்தருக்குப் பின்னரும் தமிழ் மக்கள் கட்சிக்கு வெளியில் தலைவர்களைத் தேடும் ஒரு போக்கில் மாற்றம் ஏற்படவில்லையா? கடந்த 10 ஆண்டுகளுக்குள்ளே தமிழ் அரசியலில் திருப்பகரமான மாற்றங்கள் எவையும் ஏற்படவில்லை என்பதனை அது காட்டுகின்றதா?

தமிழரசுக் கட்சி அவ்வாறு தேடவில்லை என்று இப்பொழுது அக்கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்லலாம். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அவ்வாறு சொல்லலாம். ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் அவ்வாறான ஓர் எதிர்பார்ப்பு உண்டு என்ற உண்மையை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். தமிழ் மக்கள் ஏன் ஓய்வு பெற்ற பிரமுகர்களைத் தலைவர்களாக்கி, அழகு பார்க்க முயற்சிக்கிறார்கள்? கட்சிகளுக்குள் இருக்கும் ஆளுமைகளை அவர்கள் தகுதியானவர்களாகக் கருதவில்லையா? கட்சிக்குள் கடந்த பல தசாப்தங்களாக மாடாக உழைத்து ஓடாகத் தேய்ந்தவர்களைத் தலைவர்கள் ஆக்கிப்பார்க்க வேண்டும் என்று ஏன் தமிழ் மக்கள் விரும்பவில்லை? அரசியலில் மிக ஆபத்தான காலகட்டத்தில், அரசாங்கத்தில் உயர்ந்த பதவிகளை வகித்து, அரசாங்கத்தின் பாதுகாப்பில் வாழ்ந்து, ஓய்வுபெற்ற பின் தமிழ் மக்களின் வாக்குகளால் தலைவர்களாக தெரிவு செய்யப்படுவது என்பது சரியானதா? அப்படியென்றால் தமிழ் மக்களுக்காக தங்களை இழந்து, தங்களை ஒறுத்து, அர்ப்பணித்து, தியாகம் செய்து கட்சிக்குள்ளேயே இருந்து தேய்ந்து போனவர்கள் அனைவரும் பிழைக்கத் தெரியாதவர்களா? அல்லது அதிர்ஷ்டம் இல்லாதவர்களா?

பாதுகாப்பான இறந்த காலத்தை பெற்றவர்கள்தான் நிகழ்காலத்தில் தமிழ் மக்களின் பேச்சாளர்களாகவும் தலைவர்களாகவும் வர முடியுமா? அவர்களுக்குப் பாதுகாப்பான இறந்த காலம் எப்படிக் கிடைத்தது? அவர்கள் தமது மக்களுக்காக தம்மை இழக்க, அர்ப்பணிக்கத் தயாராக இல்லாதபடியால் தானே? அப்படியென்றால், இப்பொழுது தமிழ்த் தேசிய அரசியலில் தலைமை தாங்கத் தேவையான தகுதி எது?

ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரை மீண்டும் பதவியில் அமர்த்த வேண்டும் என்று எதிர்பார்ப்பு தமிழ்த்தேசிய அரசியலின் இயலாமையை, போதாமையை காட்டுகின்றதா? தலைவர்களைக் கட்டியெழுப்பும் கட்டமைப்பு, ஒழுக்கம், பாரம்பரியம் போன்றன தமிழ்க் கட்சிகளிடம் குறைவு என்று மக்கள் நம்புகிறார்களா? இது மீட்பருக்காகக் காத்திருக்கும் ஓர் அரசியல் போக்கா?

ஆயுதப் போராட்டம் தொடங்கியபோது படித்த நடுத்தர வர்க்கத் தமிழர்கள் அதை எடுத்த எடுப்பில் ஏற்றுக் கொள்ளவில்லை. "சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது" என்று ஒருவித சந்தேகத்தோடுதான் அதை அணுகினார்கள். பட்டப் படிப்பு குறைந்த இயக்கத் தலைவர்களை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அல்லது அங்கீகரிக்கவில்லை. ஆனால் ஆயுதப் போராட்டம் தனது தியாகங்களின் மூலமும் வீரச்செயல்களின் மூலமும் தன்னைத்தானே நிரூபித்துக்கொண்டு முன்னேறியபோது படித்த,நடுத்தர வர்க்கம் அதற்குப் பணிந்தது. அதாவது தமிழ் மக்கள் பலங்கண்டு பின் சென்றார்கள்.

எனவே படித்த தமிழ் நடுத்தர வர்க்கம் எப்பொழுதும் படித்தவர்களை, பெரிய பதவிகளில் இருப்பவர்களை, ஆங்கிலம் பேசுகின்றவர்களை, பிரபல்யமானவர்களை, அல்லது தொகுத்துக் கூறின், அஏதோ ஒரு விதத்தில் பல மானவர்களைத்தான் எதிர்பார்ப்போடு பார்க்கும். தமிழரசியலில் இடையில் வந்த ஆயுதப் போராட்டமானது தலைகீழ் மாற்றங்களை ஏற்படுத்தினாலும் ஆயுதப் போராட்டத்திற்குப் பின்னரான கடந்த 16 ஆண்டுகால மிதவாத அரசியல் எனப்படுவது, அதன் பழைய தடத்துக்குத் திரும்பிச் சென்று கொண்டிருக்கிறதா?


செழியனை தமிழ்க் கட்சிகள் ஒரு முதன்மை வேட்பாளராக ஏற்க்கலாம் ஏக்காமல் விடலாம். ஆனால் ஒரு பகுதி தமிழ் மக்கள் மத்தியில் அப்படி ஒரு எதிர்பார்ப்பு ஏற்படுகிறது என்று சொன்னால் அதற்கும் தமிழ்க் கட்சிகள்தான் பொறுப்பு. கீழிருந்து மேல் நோக்கி, உள்ளூர் தலைவர்களை, மாவட்ட மட்டத் தலைவர்களை, மாகாண மட்டத் தலைவர்களை, தேசிய மட்டத் தலைவர்களை, மிகக் குறிப்பாக ஜனவசியம் மிக்க தலைவர்களைக் கட்டியெழுப்பத் தமிழ்க் கட்சிகளால் முடியவில்லையா?

கடந்த 16 ஆண்டுகால தமிழ்த் தேசிய அரசியலில் கட்சிகளுக்குள் ஜனக்கவர்ச்சிமிக்க ஜன வசியம் மிக்க தலைவர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்பது ஓர் அடிப்படைத் தோல்வி. இந்த வெற்றிடத்தில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு 7 ஆசனங்கள் கிடைத்தன. அர்ஜுனாவுக்கு ஓர் ஆசனம் கிடைத்தது. கட்சிகளை விடுவோம். பொதுவாக, ஒரு பகுதி தமிழ் மக்கள் மத்தியில் அவ்வாறு கட்சிகளுக்கு வெளியே ஆளுமைகளைத் தேடும் ஒரு போக்கு இருக்கிறது என்பது ஒரு தமிழ்த் தேசிய அரசியல் யதார்த்தம். அந்த யதார்த்தத்தை மாற்றியமைக்கும் விதத்தில் கீழிருந்து மேல்நோக்கி உழைக்கத் தமிழ்க் கட்சிகளால் முடியவில்லை என்பதால்தான் மீண்டும் ஓர் ஓய்வூதியரை அரசியலுக்குள் கொண்டு வர வேண்டும் என்று உரையாடப்படுகின்றதா?

அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை வைக்குமா இல்லையா என்பது நிச்சயமாகத் தெரியாது. ஆனால் அப்படி ஒரு தேர்தல் நடக்கலாம் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையில் தமிழ்த்தேசிய அரசியல் பரப்பில் மீண்டும் ஒரு ஓய்வு பெற்ற நீதிபதியைச் சுற்றி உரையாடல்கள் நடந்து கொண்டிருப்பது என்பது எதைக் காட்டுகின்றது? தமிழ்த் தேசிய அரசியலின் இயலாமையா?

கனடிய செய்திகள் Canadian News

# கம்போடியாவில் நடைபெறும் "கடாரம் கொண்டான்" ராஜேந்திர சோழன் மன்னரின் 1000வது ஆண்டு விழாவிற்கு வாழ்த்துத் தெரிவித்துள்ள கனடாவின் உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி!




எதிர்வரும் நவம்பர் மாதம் 22ம் 23ம் திகதிகளில் கம்போடியா தேசத்தில் அங்குள்ள சவுத் ஈஸ்ட் ஏசியா பல்கலைக்கழகமும் அங்கோர் தமிழ்ச் சங்கமும் இணைந்து நடத்தும் "கடாரம் கொண்டான்" ராஜேந்திர சோழன் மன்னரின் 1000வது ஆண்டு விழாக் கொண்டாட்டம் மற்றும் சிறப்பு மாநாடு ஆகிய வரலாற்றுச் சிறப்பு மிக்க தமிழர் விழாக்களுக்கு கனடாவின் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினரும் உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சருமான ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

மேற்படி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கொண்டாட்டத்திற்கு வழங்கியுள்ள வாழ்த்துப் பத்திரத்தில் ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் அங்கோர் தமிழ்ச் சங்கத்தின் பெருமைக்குரிய தலைவர் தங்கவேலு ஸ்ரீனிவாச ராவ் அவர்களைப் பாராட்டி தனது பாராட்டுக்களை பின்வருமாறு தெரிவிதுள்ளார்.




"உங்கள் அயராத முயற்சிகளால், எமது மாண்பிற்குரிய பேரரசர் ராஜேந்திர சோழனின் சாதனைகளின் மரபும், தமிழ் நாகரிகத்திற்கும் தென்கிழக்கு ஆசியாவிற்கும் இடையிலான பகிரப் பட்டுவரும் கலாச்சார பாரம்பரியமும் தொடர்ந்து போற்றப்பட்டு நினைவுகூரப்படுகின்றன. அதற்கு உங்களைப் போன்றவர்கள் காரணகர்த்தாக்களாக விளங்குகின்றார்கள் என்பதை நாம் உணர்கின்றோம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 22ம் 23ம் திகதிகளில் கம்போடியா தேசத்தில் நடைபெறவுள்ள "கடாரம் கொண்டான்" ராஜேந்திர சோழன் மன்னரின் 1000வது ஆண்டு விழாக் கொண்டாட்டம் மற்றும் சிறப்பு மாநாடு ஆகிய வரலாற்றுச் சிறப்பு மிக்க தமிழர் விழாக்களில் கலந்து கொள்ளும் முகமாக உலகின் பல நாடுகளிலிருந்தும் கல்வியாளர்கள், கலை இலக்கியவாதிகள் மற்றும் சுற்றுலாப் பயணங்களில் ஆர்வமுள்ளவர்கள் என பலர் ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் கலந்து கொள்கின்றார்கள் என அறியப்பெறுகின்றது.

மேலும், அங்கு செல்லும் அனைத்து வெளிநாட்டவர்களையும் அங்கோர் தமிழ்ச் சங்கத்தினர் சுற்றுலா ஏற்பாட்டில் பல இடங்களுக்கும் அழைத்துச் செல்லவுள்ளார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்படி மாநாட்டிலும் கொண்டாட்டங்களிலும் கலந்து கொள்ளும் விசேட அழைப்பைப் பெற்றவர்களாக கனடாவிருந்தும் சில அன்பர்கள் கம்போடியாவிற்கு பயணமாகின்றார்கள்.

அவர்களில் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கனடாக் கிளையின் தலைவரும் அதன் அகிலத் தலைமையகத்தின் அனைத்துலக ஊடகப் பொறுப்பாளருமான லோகன் லோகேந்திரலிங்கம். உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் அகிலத் தலைமையக செயற்குழுவின் பொருளாளர் மோகன் பாலசுப்பிரமணியம் அவர்கள், மற்றும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கனடாக் கிளையின் பொருளாளர் ராம்சங்கர் சிவநாதன் அவர்களும் ஒன்றாக பயணிக்கவுள்ளார்கள். அத்துடன் அவர்கள் கனடாவில் தலைமையகத்தைக் கொண்ட உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் சார்பாக வாழ்த்துக் கேடயம் ஒன்றையும் அங்கோர் தமிழ்ச் சங்கத்தினருக்கு வழங்கவுள்ளார்கள்.

கனடாவிலிருந்து மேற்படி சிறப்பு விழாக்களில் கலந்து கம்போடியாவின் வரலாற்று முக்கியத்துவம் மிக்க இடங்களையும் கண்டு மகிழ (416) 732-1608 என்னும் இலக்கத்தை அழைக்கலாம்.

கனடிய செய்திகள் Canadian News

# தமது அரசாங்கம் ஒன்ராறியோவில் வீடு ஒன்றை கொள்வனவு செய்வதை மேலும் எளிதாக்குகிறது என்கிறார் எம்பிபி விஜய் தணிகாசலம்




ஒன்ராறியோ அரசு, முதல் முறை வீடு வாங்குபவர்களுக்கு 8% மாநில இணக்கமான விற்பனை வரியை (HST) முழுமையாகத் திருப்பித் தரும் புதிய திட்டத்தை அறிவித்துள்ளது. இந்த திட்டம் ரொறன்ரோ மற்றும் ஸ்காபரோ முழுவதும் பல குடும்பங்களுக்கு தாம் சொந்தமாக வீடு வாங்கும் கனவை நனவாக்க உதவும். புதிய வீடு வாங்குபவர்களுக்கு இது அதிகபட்சம் 80,000 டொலர்கள் வரை சேமிக்க உதவும்.

"ஒவ்வொரு குடும்பத்திற்கும் அவர்கள் வேலை செய்கின்ற, படிக்கின்ற, மற்றும் குழந்தைகளை வளர்க்கின்ற இடத்திற்குப் பக்கத்தில் ஒரு வீட்டை வாங்கும் வாய்ப்பு இருக்க வேண்டும். இந்த வரி மீளளிப்பு அக்கனவை ரொறன்ரோ வாழ் மக்களுக்கு நனவாக்குகிறது" என அமைச்சர் விஜய் தணிகாசலம் கூறினார்.

இத்திட்டம் வீடு வாங்குவதை எளிதாக்குவதோடு மட்டுமல்லாமல், உள்ளூர் கட்டுமானத் துறைக்கும் ஆதரவாக இருந்து, ஸ்காபரோவின் வளர்ந்து வரும் பகுதிகளை மேலும் வலுப்படுத்தும் என்பது குறிப்பிடத்தக்கது.

# PARAGON Security Ltd. in Toronto, recognizes a Dedicated and Long - Standing Security Offier Mr. Kathir Thuraisingam

# ரொறன்ரோவின் PARAGON Security Ltd பாதுகாப்பு நிறுவனம் அங்கு நீண்ட காலம் பாதுகாப்பு உத்தியோகத்தராக பணியாற்றிய கதிர் துரைசிங்கம் சேவையை கௌரவித்தது



கனடாவில் 38 வருடங்கள் பாதுகாப்பு உத்தியோகத்தராக பல நிறுவனங்களில் பணியாற்றியும் அதில் 15 வருடங்களை PARAGON Security Inc. பாதுகாப்பு சேவை நிறுவனத்திலும் பணியாற்றியமைக்காக கடந்த ஒக்டோபர் 24ம் திகதி அங்கு நீண்ட காலம் பாதுகாப்பு உத்தியோகத்தராக பணியாற்றிய கதிர் துரைசிங்கம் அவர்களின் சேவையையும் அவரது அர்ப்பணிப்பான கடமையுணர்வையும் பாராட்டிக் கௌரவித்தது.

கதிர் துரைசிங்கம் அவர்கள் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் பயின்று உதவி வைத்திய அதிகாரியாக (RMP) இலங்கையிலும் நைஜீரியாவிலும் பணியாற்றி பின்னர் கனடாவில் குடியேறி கடந்த 38 வருடங்களாக வசித்து வருகின்றார்.

இந்த காலப்பகுதியில் ஒரு பாதுகாப்பு அதிகாரியாக பணியாற்றத் தொடங்கி தொடர்ச்சியாக 38 வருடங்கள் அந்த பணியை அர்ப்பணிப்புடன் ஆற்றியவராய் அண்மையில் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

எனினும் அவரது தொடர்ச்சியான சேவை மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றுக்காக இந்த கௌரவம் வழங்கப்பெற்றது.

கதிர் துரைசிங்கம் அவர்கள் கனடாவில் கலை. இலக்கியம். மற்றும் நாடகம் அத்துடன் மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வளர்ச்சி ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டு நூற்றுக்கணக்கான நண்பர்களை சம்பாதித்துக் கொண்டவர் என்பதும்குறிப்பிடத்தக்கது. கனடா உதயன் மற்றும் தாய்வீடு பத்திரிகைகளில் தனது படைப்புக்களை வாசகர்களுக்காக அளித்தவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இங்கே காணப்பெறும் படங்களில் கதிர் துரைசிங்கம் அவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் மற்றும் ஆகியவற்றை வழங்கிய திரு. சிவா மகேந்திரன் (Director Client Service) உட்பட சில உயர் அதிகாரிகளும் காணப்பெறுகின்றனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# ஆபத்தான போதை பொருட்கள் குறித்து மன்னார் உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தில் "விழிப்புணர்வு நிகழ்ச்சி"



(06-11-2025)

தேசிய ஆபத்தான போதைப்பொருள் கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் (National Dangerous Drugs Control Board), மன்னார் உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிலையம் (ATI Mannar) இணைந்து உயர் தொழில்நுட்பவியல் கற்கை மாணவர்களுக்கான ஆபத்தான போதை பொருட்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்வு 06-11-2025 அன்று வியாழக்கிழமை காலை மன்னார் உயர் தொழில்நுட்பவியல் நிலையத்தில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இராணுவத்தின் 54 ஆம் காலாட் படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் A.M.C. அபேகோன் கலந்து சிறப்பித்தார்.

நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளராக வடமாகாண புனர்வாழ்வு பணியகத்தின் புனர்வாழ்வு அதிகாரி லெப்டினன்ட் கர்னல் W.P.T. பெரேரா கலந்து கொண்டார்.

நிகழ்ச்சியின் மூல வளப் பேச்சாளராக தேசிய ஆபத்தான போதைப்பொருள் கட்டுப்பாட்டு வாரியத்தின் வெளிச்சேவை அதிகாரி திருமதி. A. சியாமினி வைலெட் கலந்து கொண்டு, மாணவர்களுக்கு போதைப் பொருட்களின் தீமைகள், அவற்றின் சமூக விளைவுகள் மற்றும் அதிலிருந்து விலகி வாழ்வதன் முக்கியத்துவம் குறித்து விரிவான விளக்கமளித்தார்.



மேலும், மாணவர்கள் ஆரோக்கியமான, பயனுள்ள மற்றும் போதைப்பொருள் இல்லாத வாழ்க்கையை கடைபிடிக்க வேண்டும் என வழிகாட்டினார்.

இந்நிகழ்வில் லெப்டினன்ட் கர்னல் நளின் ஜயசுந்தர, மன்னார் உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் இயக்குநர் R.J. மோகன் குரூஸ், விரிவுரையாளர்கள் மற்றும் பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

கல்வி நிலையத்தின் அனைத்து மாணவர்களும் ஆர்வமுடன் கலந்து கொண்டு, போதைப்பொருள் பயன்பாட்டின் ஆபத்துகள் குறித்து விழிப்புணர்வு பெற்று, ஒரு ஆரோக்கியமான மற்றும் பயனுள்ள எதிர்காலத்தை உருவாக்கும் உறுதியை எடுத்துக்கொண்டனர்.

# செம்மணியில் மீட்கப்பட்ட பிற பொருட்கள் தொடர்பில் CID விசாரணை, அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது

இலங்கையின் இரண்டாவது பெரிய மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட பிற பொருள் ஒன்று, நான்கு ஜனாதிபதிகளின் ஆட்சிக் காலப்பகுதியில் தயாரிக்கப்பட்டிருக்கலாம் என குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள செம்மணி சித்துப்பாத்தி இந்து மயான மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு, நவம்பர் 3, 2025 திங்கட்கிழமை, யாழ்ப்பாணம் நீதிபதி செல்வநாயகம் லெனின்குமார் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட பிற பொருட்களில் ஒன்றான செருப்பு 1980 மற்றும் 1995க்கு இடையில் தயாரிக்கப்பட்டிருக்கலாம் என குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்துள்ளதாக, நீதிமன்ற நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட பாதிக்கப்பட்டவர்கள் சார்பான சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

"குற்றப்புலனாய்வு பிரிவினரால் அறிக்கை ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. 25ஆவது சான்று பொருளான செருப்பு குறித்த அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அந்த அறிக்கையில் அந்த பாட்டா நிறுவனத்தினால் 39 ரூபாய் 90 சதம் என விலை குறிக்கப்பட்ட அந்த செருப்பு, 1980 இற்கும் 1995ஆம் ஆண்டுக்கும் உட்பட்டதாக இருக்கலாம் என அறிக்கை ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது."

1986ஆம் ஆண்டு இராணுவ உறுப்பினர்கள் குழுவால் பால-ியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொல்லப்பட்ட மாணவி கிருஷாந்தி குமாரசாமி மீதான விசாரணையின்போது செம்மணியில் பல மனிதப் புதைகுழிகள் இருப்பது முதன்முதலில் தெரியவந்தது.

மனித எலும்புகளுடன், செம்மணி புதைகுழியிலிருந்து இதுவரை மீட்கப்பட்ட பிற பொருட்களில் குழந்தை பால் போத்தல், ஒரு பொம்மை உள்ளிட்ட விளையாட்டுப் பொருட்கள, சிறுவர் காலணிகள் மற்றும் பாடசாலைப் பை ஆகியவை அடங்கும்.

45 நாட்கள் நீடித்த இரண்டாம் கட்ட அகழ்வாய்வு செப்டெம்பர் 6, 2025 அன்று நிறைவடைந்த நேரத்தில், ஒரு குழந்தையின் எலும்பு உட்பட 239 எலும்புக்கூடுகள் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட மனித எலும்புகள் குறித்த மேலதிக ஆய்வுகளுக்கான பாதீட்டை, சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளதாக சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

"ஏற்கனவே எடுக்கப்பட்ட 240 மனித எலும்புக்கூடுகளை ஆய்வு செய்து அது குறித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான பாதீடு இன்று நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. மேலும் அதற்கென பணியாற்றுவதற்காக, சட்ட வைத்திய அதிகாரிகளான செல்லையா பிரணவன், மயூரதன் உள்ளிட்ட 7 நிபுணர்களின் பெயர்களும் பரிந்துரைக்கப்பட்டு அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த விடயம் குறித்து ஆராய்வதற்காக டிசம்பர் 15ஆம் திகதி வழக்கு விசாரணை இடம்பெறவுள்ளது."

இந்த விடயம் குறித்து ஆராய்வதற்காக டிசம்பர் 15, 2025 அன்று நீதிமன்றில் விசாரணை இடம்பெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர், யாழ்ப்பாண நீதிபதி எஸ். லெனின்குமார், சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன், சட்டத்தரணிகளான வி.எஸ். நிரஞ்சன் மற்றும் ஞா.ரணிதா மற்றும் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் (OMP) பிரதிநிதிகள் ஆகியோர் செம்மணி மனித புதைகுழியை பார்வையிட்டனர்.

மழைநீரால் ஏற்கனவே வெள்ளத்தில் மூழ்கியுள்ள செம்மணி மனித புதைகுழியில் மீண்டும் அகழ்வாய்வைத் ஆரம்பிப்பது குறித்த தீர்மானத்தை ஜனவரி 19, 2026 வரை ஒத்திவைக்க நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

செம்மணி மனித புதைகுழி தொடர்பான வழக்கு, ஒக்டோபர் 13, 2025 அன்று யாழ்ப்பாணம் நீதிபதி செல்வநாயகம் லெனின்குமார் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அகழ்வாய்வுப் பணிகளுக்காகக் கோரப்பட்ட 1.9 மில்லியன் ரூபாய் கிடைக்கப்பெற்றுள்ளதாக காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் (OMP) சட்டத்தரணி பூரணி ஜோசப் மரியநாயகம், வழக்கு விசாரணையின் பின்னர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

"மூன்றாம் கட்ட அகழ்வாய்வுப் பணிகளுக்கான நிதி எங்களுக்குக் கிடைத்துள்ளது. நீதி அமைச்சிலிருந்து கோரப்பட்ட 19 மில்லியன் ரூபாய் எங்களுக்குக் கிடைத்துள்ளது."

கனடாவின் பனிக் காலத்தை யாழ்ப்பாணத்தில் நிம்மதியாக கழித்திட

கனடாவின் பனிக் காலத்தை யாழ்ப்பாணத்தில் நிம்மதியாக கழித்திட விரும்புகின்றீர்களா?
யாழ்ப்பாணம் மானிப்பா நகரத்திற்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய அழகிய வீட்டை மாதாந்த அடிப்படையில் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:
Visnu: 0094 77515 6292
0094 77515 5331
WhatsApp:
44 7957 561 555




## வீணாவின் கவிக்கணை

பள்ளிப்பருவம்!
நாம் துள்ளுத்திரிந்த
அந்த அழகிய பருவம்,
சுமையில்லாமல்
வாழ்ந்த சுகமான பருவம்,
எதைப்பற்றிய
சிந்னையும் இல்லா
நிம்மதியான பருவம்,
நினைவுகளில் மட்டுமே
மிதக்கும் அந்த இனிய பருவம்
திரும்ப வாராதா ?
இன்னும் கொஞ்சம் நீளாதா?
என இன்றும் ஏங்கும் நம் உள்ளம்!


உங்கள் உடல் வலிகளிலிருந்தும் தசைப் பிடிப்பு காரணமான உபாதைகளிலிருந்தும்
தகுந்த சிகிச்சை மூலம் நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ள எம்மை நாடுங்கள்...
MiracleHealth
ஸ்காபுறோ நகரில்
3000 Lawrence Ave. East, Scarborough, ON M1P 2V1
என்னும் விலாசத்தில் இயங்குகின்றது.
( Scarborough General Hospital அருகில்)
Meet Our Team
Physiotherapy • Massage Therapy • Counselling • Ayurvedic Therapy • Acupuncture • IV Nutrition Therapy
We are accepting new patients.
தமிழிலும் உரையாடும் வசதிகள் உள்ளன.
Phone:
416.289.4444


உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?
Legalize your basement now!
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets
Coverall Group Inc.
Contact: Siva
416-706-8160 OR 416-893-3216

## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

### Accepting New Patients
### புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய காத்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:


டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Raiaratnam

**Clinic Location:**
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca




11/24

---

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி
பழைய மாணவர் ஆசிரியர் சங்கம் - கனடா
நடாத்தும்

## 24வது நத்தார் இன்னிசை ஆராதனை

**DRIEBERG COLLEGE ALUMNI ASSOCIATION**
CHAVAKACHCHERI – CANADA
Presents the

**24th ANNUAL CHRISTMAS CAROL SERVICE**

திகதி: சனிக்கிழமை நவம்பர் 08, 2025
**Saturday November 08, 2025**
நேரம்: 6:00 மாலை - **6:00PM**
இடம்: **Milliken Wesleyan Methodist Church**
**3 Clayton Drive, Markham, Ontario L3R8N3**
**(Kennedy Rd and North of Steeles Ave. E.)**

பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், சிநேகிதர்கள், யாவரும் குடும்பத்துடன் சமூகம் தந்து, 24வது நத்தார் இன்னிசை ஆராதனையில் பங்குபற்றி சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

**Contacts:**
Rajagopal Mathialagan: 416-277-1067 Mohan Devabalan: 416-274-2169
Reginald Thevaranjan: 647-740-2965 Ebenezar Thevasagaiam: 647-895-8001
Gunam Hunt: 905-472-0379

---

# Skandavarodaya Old Students' Association - Canada

Annual Gala Dinner & Cultural show

SKANDAVARODAYA O S A CANADA

## ஸ்கந்தவரோதயா பழையமாணவர் சங்கம் - கனடா
கலை நிகழ்வுகளும் இராப்போசன விருந்தும்

## SKANDA NITE 35th ANNIVERSARY 1991 - 2025



## Saturday, Nov.15,2025 at 5 pm

Kennedy Convention Centre
1199 Kennedy road,Scarborough, M1P 2L2

Shianaaz RAGAVAN Vidhyashankar

## Music by - Shibo Orchestra

Please join Us on This Evening
For Entertainment, Dance, Drama
Dinner & More

SORN AUDIO VISUAL

MC Vijitha

Contact: Nada: 416 616 8751 Judita: 416 402 4495 Sahadeva: 416 559 6065 Tharma: 416 843 2702


CTAA CANADIAN TAMIL ARTISTS' ASSOCIATION
yugam radio yugam TV
கலைச் செம்மல் தமிழ் திரு. க-மதிபாஸ்கரன் அரங்கு
மதங்க சூளாமணி
கணபதி ரவீந்திரன்
கனடியத் தமிழ் கலைஞர்கள் சங்கம், யுகம் வானொலி, யுகம் தொலைக்காட்சி இணைந்து பெருமையுடன் வழங்கும்
நவரசத் தாரகை
ரூபி யோகதாசன்
21ஆவது ஆண்டு
நாடகப் பெருவிழா
சிரிக்க, சிந்திக்க, சிந்தனைக்கு விருந்தளிக்க
ஒரே மேடையில் ஐந்து நாடகங்கள் மற்றும்
பல்சுவை நிகழ்ச்சிகள் உங்களை மகிழ்விக்கும்
SATURDAY
DEC
06
@4:30PM
TICKET $20
ARMENIAN YOUTH CENTRE
50 HALLCROWN PLACE (VICTORIA PARK & 401) TORONTO, ON, M2J 1P6
LOCATION QR
TORONTO GAANA BAND
SATHEES (416) 846-1718
SENTHURAN (416) 993-6386
இன்னிசை நிகழ்ச்சியும் இடம்பெறும்
RAVI : 416 898 7284 RUBY : 416 670 6522
TITLE SPONSOR
Vijaya Jewellery
MEDIA SPONSOR
416-752-1524
BEHIND ME
GTA தமிழ்
647-278-5881 416-678-5866
TORONTO TAMIL
416-429-2822
416-561-3302
416.824.1212
TIME FM
438-771-8463
Tamil Mirror
Krishna
Easy 24 News
416.414.5562
நாடகக் கலையை வாழவைக்கும் அனுசரணையாளர்கள்
MAIN SPONSOR
SPECTRON X TECHNOLOGIES
டாக்டர் ஜனகன் சோமசுந்தரம் and Associates
Now Opened at CEDARBRAE MALL
CEDARCARE MEDICAL CENTRE
Tel: 416-289-9786
IT'S TIME FOR OUR OWN TAMIL COMMUNITY CENTRE!
SANTHA PANCHALINGAM
Entrepreneur | Philanthropist | Investor | Community Builder
416.200.5470 | info@santha.ca
AJAX CREMATORIUM
BRAMPTON CREMATORIUM
MELWYN STANISLAUS DHARMA B.COM
LICENSED FUNERAL DIRECTOR 647-713-6049
HI FI BARBERSHOP
PAWNBANK INC.
Your Satisfaction is Our Success
EASY CASH FOR GOLD
416-754-7198
info@sugshe.com
www.pawnbank.ca
(FINCH & MCCOWAN)
1571, Sandhurst Circle #159D, Scarborough - M1V1V2.
SPONSOR
VIBRANT HOSPITALITY GROUP
Great LIFE FINANCIAL
Jay Nadarajah CLU, CHS
Financial Advisor
MORTGAGE FINANCIAL
NESAN
416-908-5658
CityCan
JRB GROUP
R.R.Rajkumar
647-289-6164
Dr. Sabesan Thangathurai
AMMA PAWN BROKER
CASH FOR GOLD
DEVADAS LAW
Jeni & Paul Enterprises Inc.
Celebrate! Sun Life
The Pongal Villa 2024
Easan Krishna-Pillai
416-557-7384
N.K.S
DRAPERY & BLINDS FABRIC
KETHA: 416.321.6420
THE SECURITY FORCE
Cell Tel Mobility
VASHA ORGANIC PRODUCTS
RKS PRINTERS
PRINTING PARTNER


POWERED BY?
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
POWERED BY?
உதயன் பத்திரிகையின் 29வது ஆண்டு விழாவும்
2025 ஆண்டிற்கான பல்சுவைக் கலை விழாவும்
29th Anniversary Celebratons and Uthayan Cultural Festival-2025
DEC. 13th 2025
சனிக்கிழமை மாலை 6.00 மணி
* பயனுள்ள உரைகள்
* இசை
* நடனம்
* நாடகம் மற்றும்
* கவிதா நிகழ்வு ஆகியன
ஒன்றாரியோ தமிழிசைக் கலா மன்ற
கலாச்சார மண்டபம்
1120 Tapscott Rd Unit 3,
Scarborough, ON M1X 1E8
VIBRANT HOSPITALITY GROUP
ONE OF CANADA'S FASTEST GROWING HOSPITALITY AND DEVELOPMENT GROUPS
OUR EXPERTISE
CONSTRUCTION & DESIGN
OPERATIONS
REVENUE MANAGEMENT
SALES & MARKETING
HUMAN RESOURCES
TOLL FREE 1 888 674 7770 | LOCAL 905 769 1509 | VIBRANTHOSPITALITYGROUP.COM
K T GROUP
PRESIDENT & CEO
MR. KANA SELVA
647302 1189
கனகாம்பிகை
அடகுமாடம்
தங்க நகை கடன்
தொடர்புக்கு
416-754-7198
CALL US: 416-269-7198
For Tickets and information: 416 732 1608 or 416 752 1524



# அரசு – அநுரகுமாரவிடம் அதிகாரம் – பாதாளக்குழுக்களிடம்




***"2025 ஜனவரி முதல் இன்று வரை இலங்கையில் 53 பேர் சுட்டுக்கொலை. 2,539.5 கிலோ ஐஸ், 1,832.8 கிலோ ஹெரோயின், 14,772.4 கிலோ கஞ்சா, 32.6 கிலோ கொக்கெய்ன், 30 இலட்சம் போதை மாத்திரைகள், 600கிலோ வேறு போதைப்பொருட்கள் கைப்பற்றல். ரீ 56 ரக துப்பாக்கிகள், கைத்துப்பாக்கிகள். ரிவோல்வர்கள் உட்பட 2,097 துப்பாக்கிகள் மீட்பு, போதைப்பொருள் தொடர்பில் 1,95,948 பேர் கைது."***

**- கே.பாலா -**

"புதிய திசை", "மாற்றம்" என்ற கோஷங்களோடு வரலாற்று வெற்றிபெற்று இலங்கையின் ஆட்சியைக் கைப்பற்றிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி. - தேசிய மக்கள் சக்தி அரசு ஒரு வருடத்தை கடக்கும் நிலையில் இலங்கை கொலைகள் மலிந்த பூமியாகவும் குற்றங்கள் பெருகும் நாடாகவுமே மாற்றம் கண்டு வருகின்றது. "அரசு அநுரவிடம் - அதிகாரம் பாதாளக்குழுக்களிடம்" என்ற நிலைமையே இலங்கையில் அண்மைய நாட்களில் ஏற்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டு ஜனவரி முதல் இற்றைவரை நாட்டில் 105இற்கும் மேற்பட்ட துப்பாக்கிச் சூடுகள் நடந்துள்ளன, இதனால் 53 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 58 பேர் காயமடைந்துள்ளனர். இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில், 76 சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடையவை. பெரும்பாலான கொலைகளுக்கான கூலியாக 400,000 - 500,000 ரூபா வரை மட்டுமே கோரப்படுகின்றன, சில சந்தர்ப்பங்களில், துப்பாக்கிச் சூடு நடத்தி கொலைகள் செய்தவர்களுக்கு பணத்திற்குப் பதிலாக போதைப்பொருள் வழங்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி இலங்கையில் இந்த 2025 ஆம் ஆண்டின் ஜனவரி முதலாம் திகதி முதல் ஒக்டோபர் 22 ஆம் திகதி வரையான சுமார் பத்து மாத காலப்பகுதியில், நாட்டில் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக ஒரு இலட்சத்து 87 ஆயிரத்து 672 வழக்குகள் நாட்டின் பல்வேறு நீதிமன்றங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்தக் காலப்பகுதியில், பாதுகாப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட ஒரு இலட்சத்து 91 ஆயிரத்து 320 சுற்றிவளைப்புகளில், போதைப்பொருள் தொடர்பில் ஒரு இலட்சத்து 95 ஆயிரத்து 948 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கையின் போது, 60 இலட்சத்து 19 ஆயிரத்து 343க்கும் அதிகமான நபர்கள் சோதனையிடப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் வகைகளில், ஐஸ் போதைப்பொருளே அதிகளவில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அதன்படி மொத்தமாக 2,539.5 கிலோவுக்கும் அதிகமான ஐஸ் கைப்பற்றப்பட்டு, இது தொடர்பாக 66,593 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதனை தொடர்ந்து, 1,832.8 கிலோ ஹெரோயின் கைப்பற்றப்பட்டு 58,131 வழக்குகளும், 14,772.4 கிலோ கஞ்சா மற்றும் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டு 58,724 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன், 32.6 கிலோ கொக்கெய்ன் கைப்பற்றப்பட்டு 91 வழக்குகளும், 30 இலட்சம் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டு 2,808 வழக்குகளும், 600கிலோ வேறு போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டு 1,475 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறான சுற்றிவளைப்புகளின் போது, ரீ 56 ரக துப்பாக்கிகள், கைத்துப்பாக்கிகள் மற்றும் ரிவோல்வர்கள் உட்பட மொத்தமாக 2,097 துப்பாக்கிகள் பாதுகாப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. அதுமட்டுமன்றி பாதாள உலக்குழுக்களின் தலைவர்கள், உறுப்பினார்கள் பலர் உள் நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளில் வைத்தும் கைது செய்யப்பட்டு நாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளனர். ஆனாலும் அநுர அரசினால் நாட்டில் கொலைகளையோ, குற்றங்களையோ, பாதாளக்குழுக்களையோ, போதைப்பொருட்களையோ கட்டுப்படுத்த முடியாதளவுக்கு இலங்கையின் அரசியலும் அரச அதிகாரமும் பாதாளக்குழுக்களுடன் பின்னிப் பிணைந்துள்ளன.

எந்த பாதாளக் குழுத்தலைவரை கைது செய்தாலும் அல்லது சுட்டுக் கொன்றாலும் அவரின் பின்னணியை ஆராய்ந்தால் அவர் ஏதோவொரு அரசியல் கட்சியுடன் நெருங்கியதொடர்பில் இருப்பவராகவும் அவருடன் அரசியல்வாதிகள், அரசு அதிகாரத்தில் உயர் மட்டத்தில் உள்ள பலரும் தொடர்பு வைத்திருப்பவர்களாகவுமே உள்ளனர். இதற்கு அண்மைய முக்கிய பாதாள உலககுழுத் தலைவர்களின் கைதுகளும் வெலிகம பிரதேச சபை தவிசாளரின் கொலையும் சாட்சிகளாகின்றன.

இலங்கை அரசியலும் அரச அதிகார உயர்மட்டமும் பாதுகாப்புத் தரப்புக்களும் எந்தளவுக்கு பாதாளஉலகக் குழுக்களோடு பின்னிப்பிணைந்து நகமும் சதையுமாக இருக்கின்றன என்பதற்கு அண்மையில் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதற்கான "முழு நாடுமே ஒன்றாக" என்ற தேசிய செயற்பாட்டு அங்குரார்ப்பண நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவும் ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார தனது உரையில், "போதைப்பொருள் அச்சுறுத்தல் இயற்கையாக உருவாகவில்லை என்றும், அது நீண்ட காலமாக அரசியல்வாதிகள் மற்றும் சில அரச அதிகாரிகளின் ஆசிர்வாதத்துடன் உருவாக்கப்பட்டது. இந்த பேரழிவு முழு சமூகத்தையும் ஆட்கொண்டுள்ளது. இதனுடன் தொடர்புபட்டதாக பாரிய நிதி வலையமைப்பு காணப்படுகிறது. ஒரு கிலோ 2 கோடி ரூபாவை விடஅதிக விலைக்கு விற்பனை செய்யும் போதைப் பொருள் உள்ளது. எமக்கு 800 - 900 கிலோபிடிபடுகிறது. நாட்டிற்குள் வரும் அனைத்து போதைப் பொருட்களையும் நாம் கைப்பற்றவில்லை. அவர்கள் அனுப்பும் தொகையில் சிறுதொகையே கைது செய்யப்படுகிறது. எந்தளவு தொகை விநியோகிக்கப்படுகிறது என்பது கைப்பற்றும் தொகையின் மூலம் கணிக்கலாம். கருப்புப் பொருளாதாரத்தை கட்டெயெழுப்பும் வர்த்தகமாக இது மாறியுள்ளது. அதனால் அவர்களிடையே சந்தையை பங்கு போடுவதில் மோதல் காணப்படுகிறது. ஒவ்வொரு குழுக்களுக்கிடையில் துப்பாக்கிச் சூடு நடைபெறுகிறது. ஒவ்வொரு பிரதேச எல்லைகளுக்கு மற்றைய தரப்பு நுழைய முடியாது. போதைப் பொருள் வர்த்தகத்துடன் தொடர்புபட்டதாகவே இந்தகொலைகள் நடைபெறுகின்றன.

அவர்களிடமுள்ள பண பலத்தினால் அரச பொறிமுறை ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இனிமேலும்இதனை மறைத்து இந்தப் பிரச்சினைக்கு முகங்கொடுக்க முடியாது. அவர்களிடையே ஆயுதங்கள்உள்ளன. அனுமதிப் பத்திரத்துடன் ஆயுதங்களை பயன்படுத்தும் அதிகாரம் அரசாங்கத்திற்கேஉள்ளது. அரசிடம் இருக்க வேண்டிய ஆயுதங்கள் எவ்வாறு அவர்கள் கைகளுக்குச் சென்றது? சிலஇராணுவ முகாங்களில் இருந்து 73 ரீ 56 ரக துப்பாக்கிகள் அவர்களின் கைகளுக்குச் சென்றுள்ளன. அதில் சுமார் 35 துப்பாக்கிகள் மீளப் பெறப்பட்டுள்ளன. அதற்குப் பயன்படுத்தும் ரவைகள்பிடிபட்டுள்ளன. இராணுவ கேர்னல் ஒருவர் தான் இவற்றை வழங்கியுள்ளார். அதற்காக அவரின்வங்கிக் கணக்கிற்கு பணம் கிடைத்துள்ளது. ஒரு பொலிஸ் அதிகாரி தனது ஆயுதத்தை விற்பனைசெய்து விட்டு தப்பிச் சென்றுள்ளார். அந்த ஆயுதக் குழுக்களிடமுள்ள பண பலத்தினால் இவைநிகழ்ந்துள்ளன. இது தொடர்பான விசாரணைகளில் பொலிஸ் அதிகாரிகளின் தொடர்பு வெளிப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு, பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் அதற்காக உருவாக்கப்பட்ட நிறுவனங்களுக்குள் கருப்பு ஆட்சி உருவாக்கப்பட்டுள்ளது. மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் வாகனங்கள் இன்றி வாகன இலக்கத்தகடுகள் வழங்கப்பட்டுள்ளன. மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திலுள்ள சிலர் சட்டவிரோத வாகனங்கள் பாவனைக்கு வரபங்களித்துள்ளனர். குடிவரவு குடியகல்வு திணைக்களம் தேசிய பாதுகாப்பிற்காக பங்களிக்கும்நிறுவனம். ஆனால் சில அதிகாரிகள் பாதாள தலைவர்களுக்கு கடவுச்சீட்டு தயாரித்துவழங்கியுள்ளனர். இவ்வாறு தான் அரச கட்டமைப்பிற்குள் இந்தப் பேரழிவு நுழைந்துள்ளது. சுங்கத்திணைக்களத்திலுள்ள சிலருக்கும் இந்தச் கும்பலுடன் தொடர்பு உள்ளது. அதனால் உத்தியோகபூர்வ அரசாங்கம் இருப்பதைப் போன்று அதே அளவு பலமாக இல்லாவிட்டாலும் அவர்களுக்குத் தேவையானவற்றை வழங்கும் அரச பொறிமுறையொன்றை தம்பிடியில் வைத்துள்ளனர். வெளிப்படையான அரசாங்கத்தைப் போன்றே மறைவான கருப்பு ஆட்சியொன்று உருவாகியுள்ளது.

அரசியல் கட்சிகளுக்குள்ளேயும் அவை நுழைந்துள்ளன. சிலர் மக்கள் பிரதிநிதிகள் ஆகின்றனர். உள்ளூராட்சி தலைவர்களாக தெரிவாகின்றனர். தனியான பட்டியல் தயாரித்து தேர்தலில்போட்டியிட சிலர் தயாராகி இருந்தனர். ஆட்சி அதிகாரம், எம்.பிகள் உருவாக்குவது வரையான ஆரம்ப விதை நடப்பட்டுள்ளது. இதனை அடையாளங் கண்டுள்ளோம். இந்த நிலை தானாக உருவானதல்ல. நீண்ட காலமாக அரசியல் மற்றும் சில அரச அதிகாரிகளின் ஆசிர்வாதத்துடன்தான் இது உருவானது. இதன்பின்னணியில் தெளிவான அரசியல் ஆசிர்வாதம் உள்ளது. அதிகாரிகளின் ஆதரவு இருக்கிறது. அரசியல்வாதிகளுடன் நெருங்கிப் பழகி அவர்களின் தேவைகளை நிறைவேற்றி மறைவான அதிகாரத்தை போதைபொருள் வர்த்தகர்கள் பெறுகிறார்கள். சில அரச பொறிமுறையில் நுழைந்து விசாரணைகளை தடுக்கவும் வீதியில் சுட்டுக் கொலை செய்வதற்கும் இந்த மறைவான அதிகாரத்தை அவர்கள் பயன்படுத்துகின்றனர்" என்று கூறுகின்றார்.

இவ்வாறாக முன்னர் இருந்த அரசாங்கங்கள், மற்றும் பிரபல அரசியல் கட்சிகளுக்கு பாதாள உலகக் குழுக்களோடு இருந்த தொடர்புகள் போல் தற்போதைய ஜே .வி.பி. - தேசிய மக்கள் சக்தி அரசுக்கு தொடர்புகள் இல்லை என்பதனால் அவர்கள் பாதாள உலகக் குழுவை வேட்டையாடுவதில் தீவிரம் காட்டினாலும் இலங்கையில் அரசியலும் பாதாளகுழுக்களும் பிரிக்கப்பட முடியாதவையாக இருப்பதனாலும் அவ்வாறு பாதாள உலகக்குழுக்களை அழிப்பதானால் பல பிரபல அரசியல்வாதிகளிலும் அரசியல் கட்சி களிலும் கை வைக்க வேண்டி வரும் என்பதாலும் தற்போதைய அரசுக்கு பாதாள உலகக்குழுவை வேட்டையாடுவதென்பது குதிரைக் கொம்பாகவே இருக்கும்.

அதனால் தற்போதைய அரசும் இந்த பாதாளக் குழுக்களையும் பெருகும் குற்றங்களையும் வைத்து அரசியல் செய்து தனது ஆட்சிக் காலத்தை நகர்த்த முற்படுவதாகவே தெரிகின்றது. ஆட்சிக்கு வருவதற்காக மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளில் இதுவரை முக்கியமான எதனையுமே இந்த அரசு நிறைவேற்றவில்லை. குறிப்பாக தமிழ் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளில் ஒன்றைக்கூட அநுரகுமார அரசு நிறைவேற்றவில்லை. தாம் கொடுத்த வாக்குறுதிகளை மக்களிடமிருந்து மறக்கடிக்கச் செய்வதற்காக, சினிமாப்படங்களில் வரும் சண்டைக்காட்சிகள் மக்களை பரவசப்படுத்துவதுபோல் இந்த பாதாள உலகக்குழுக்களின் மோதல்கள், கொலைகள், குற்றங்கள், அதிரடிகைதுகளை பரபரப்பாகி "பாதாள உலகக்குழு அரசியல்" ஒன்றைத்தான் அரசும் முன்னெடுக்கின்றது.

இந்த "பாதாள உலகக்குழு அரசியல்" தந்திரத்தில் மக்களும் ஈர்க்கப்பட்டு இன்று யார் கொல்லப்பட்டார்கள்?, இன்று யார் கைது செய்யப்படுவார்கள்? எந்த அரசியல்வாதி சிக்கப்போகின்றார்? செவ்வந்திக்கு யார் யாருடன் தொடர்பு? செவ்வந்தி யாரைக் காட்டிக் கொடுக்கப்போகின்றார்? செவ்வந்திக்கு தமிழ் தரப்புகளுடன் தொடர்பு வந்தது எப்படி? என்பதையே தினமும் ஆராய்ந்து கொண்டும் அது தொடர்பான ஊடகங்களின் பரபரப்பு, "பிரேக்கிங்" செய்திகளை எதிர்பார்த்துக்கொண்டும் அது தொடர்பில் விவாதித்துக்கொண்டும் இருக்கின்றனர். இதுவே இந்த அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகவும் இருப்பதனால் இன்னும் சிறிதுகாலத்துக்கு இலங்கையில் "பாதாள உலகக்குழுக்கள்" என்ற அரசினால்படமே காண்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கும். அரசு தனது ஆட்சியையும் ஊடகங்கள் தமது வருமானத்தையும் பாதுகாத்துக்கொள்ள, மக்களே தொடர்ந்தும் ஏமாற்றப்படப் போகின்றார்கள்.

# ONTARIO SENIOR TAMILS BENEVOLENT ASSOCIATION (OSTBA)

**EST. 2012. REG: NOT FOR PROFIT ORGANIZATION #1866873, ONTARIO, CANADA**

ஒன்டாரியோ முது தமிழர் நலன்புரி ஆதாயமற்ற சங்கம் # 1866873

**Address: OSTBA, PO. Box 48068 Dundas & Sheppard, Mississauga ON L5A 4G8**



## Helping Seniors Live with Dignity, Security, and Peace of Mind:

As many of our seniors reach advanced age, it is natural to experience concerns about health, financial security, and emotional well-being. Feelings of loneliness, neglect, and even elder abuse are unfortunate realities for some in our community. In this context, any collective and cooperative effort to improve our financial and emotional security can go a long way toward alleviating these worries and restoring peace of mind. Establishing a self-funded Death Donation Reserve Fund, exclusively contributed to by members, to support families at the time of a member's passing. Inspired by similar Tamil benevolent organizations in Sydney, Australia, OSTBA was officially registered as a not-for-profit organization in Ontario in 2012. Since its inception, OSTBA has made payments to the families of seventy-seven (77) members. We have members from numerous Senior Tamil Organizations in Ontario.

## Membership Eligibility:

To become a member of OSTBA, you must:

- Be between the ages of 60 and 75
- Be a citizen or permanent resident of Canada
- Be free from any terminal illness at the time of application
- Be a paid member of a recognized Tamil seniors association (provide name and membership number)
- Provide two nominees, one of whom will receive the Death Donation upon your passing (subject to OSTBA constitution requirements)
- Declare that the information in your application is true and agree to abide by the OSTBA Constitution



## Membership Contributions & Benefits:

- Initial deposit starts as low as $95.00
- Annual Membership fee is $20.00
- On each death call, members contribute $20.00
- Members must maintain a minimum balance of $85.00 in their account
- In recent months (2025), the average payout to the family of a deceased member was approx. $4,700.00 while each member only contributed $20 per call
- Contributions are held in the Death Donation Reserve Fund (By-Law #3.2)
- No office or administrative overheads as OSTBA is entirely run by an elected volunteer Board operating remotely

## Important Membership Conditions:

To become a member of OSTBA, you must:

- You are a Provisional Member for the first 12 months from your initial payment
- No benefits are available during the first year of membership
- Members may also make a special declaration to assign benefits to two individuals, subject to OSTBA's constitution.

For more information please contact:
Tel: **416-473-6880 / 416 -629-0065**
Email: **ostba2019@gmail.com**
Web: **ostb5.ca**

# Roundtable Discussion with the Sri Lankan Business Delegation hosted in Scarborough, by Canada-Sri Lanka Business Convention

# கனடா – இலங்கை வர்த்தக நட்புறவுக் கழகம் ஸ்காபுறோவில் நடத்திய இலங்கையின் வர்த்தக தூதுக்குழுவினருடனான வட்டமேசை கலந்துரையாடல்






கனடா வாழ் வர்த்தகப் பிரமுகர்களான திரு கணேசன் சுகுமார் மற்றும் குலா செல்லத்துரை ஆகியோரை முக்கிய இயக்குனர்சபை உறுப்பினர்களாகக் கொண்ட கனடா-இலங்கை வர்த்தக நட்புறவுக் கழகத்தின் எற்பாட்டில் இம்மாதம் 3ம் திகதி திங்கட்கிழமையன்று காலை தொடக்கம் மாலை வரை ஸ்கா-புறோவில் நடைபெற்ற இலங்கையின் வர்த்தக தூதுக்குழுவினருடனான வட்டமேசை கலந்துரையாடல்யுடன் மற்றும் கருத்துப் பரிமாற்றங்கள் மற்றும் விருந்துபசாரம் ஆகியன சிறப்பாக நடைபெற்றன.






காலை தொடக்கம் நடைபெற்ற இந்த பயனுள்ள வர்த்தகக் கலந்துரையாடல்களில் கனடாவிலும் இலங்கையிலும் வர்த்தகத் துறையில் வெற்றிகரமாக பயணிப்பவர்களும் அத்துடன் கனடாவிலும் இலங்கையிலும் தங்கள் வர்த்தக முதலீடுகளைக் கொண்டு வர்த்தகத்தை விரிவுபடுத்த விரும்புகின்றவர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டார்கள்.

கனடா இலங்கை வர்த்தகக் கழகம் மற்றும் அனைத்துலக இலங்கை வர்த்தகர்கள் கழகம் போன்ற சர்வதேச அமைப்புக்களில் முக்கியமான தலைமைப் பதவிகளை வகிக்கும் திரு குலா செல்லத்துரை பல அமர்வுகளுக்கு தலைமை வகித்தார்.

அன்றை கலந்துரையாடல்களில் சுற்றுலாத்துறை. தகவல் தொழில் நுட்பம். பல்வேறு உற்பத்தித் துறைகள், உயர் கல்வி என பல துறைகளில் உள்ள வாய்ப்புக்கள் பற்றியும் கலந்துரையாடப்பெற்று பல வெற்றிகரமான முடிவுகள் எடுக்கப்பெற்றதாகவும் செய்தியாளர்களிடம் உரையாடிய திரு குலா செல்லத்துரை தெரிவித்தார்.

அங்கு எடுக்கப்பெற்ற படங்களில் சிலவற்றில் இலங்கை மற்றும் கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த வர்த்தக வெற்றியாளர்கள் காணப்படுகின்றார்கள்.

-சத்தியன்- கனடா (புகைப்படங்கள்- தமிழ்மிறர் சார்ள்ஸ் தேவசகாயம்)

# ஸ்காபுறோவில் "தளிர்"ஊடக நிறுவனம் நடத்திய "மலரும் அரும்புகளின் ஓசைகள்" – 2025 பாடல் ஒளிநாடா வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது





கடந்த வாரம் ஸ்காபுறோவில் கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் "தளிர்" ஊடக நிறுவனம் நடத்திய "மலரும் அரும்புகளின் ஓசைகள்" -2025 பாடல் ஒளிநாடா வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. அங்கு இளையவர்களின் குரலோடு பிரபல பாடக பாடகிகள் குரல் கொடுத்து தயாரிக்கப்பெற்ற பாடல் வரிகளை தளிர் நிறுவனர் சிவமோகன் அவர்கள் எழுதியிருந்தார். தமிழ்நாட்டின் பிரபல பாடகர் வி.எம்.மகாலிங்கம் அவர்களும் குரல் கொடுத்ததோடு வெளியீட்டு விழாவிலும் நேரடியாகக் கலந்து கொண்டார். இங்கே காணப்படும் படங்களில் இரண்டு பாடல்களுக்கு குரல் கொடுத்த கனடா வாழ் இளம் பாடகிகளின் பாடல்கள் வெளியிடப்படுவதையும் மேடையில் வர்த்தகப் பிரமுகர் தேவதாஸ், தளிர் சிவமோகன் மற்றும் தமிழகத்தின் பாடகர் வி. எம். மகாலிங்கம் ஆகியோரும் காணப்பெறுகின்றனர்.


## கனடா மாதகல் நலன்புரி முன்னேற்ற ஒன்றியம்

வணக்கம், கனடா மாதகல் நலன்புரி முன்னேற்ற ஒன்றிய அறிவித்தல்.

கனடா நாட்டில் தமிழ்ச் சமூக மையம் (Tamil Community Center) அமைப்பது தொடர்பான விழிப்புணர்வு கூட்டம் ஒன்றினை ஒழுங்கு செய்து கனடா மாதகல் நலன்புரி முன்னேற்ற ஒன்றிய செயலவை நடாத்தவுள்ளது.


இடம்: செந்தாமரை கலாச்சார மண்டபம்
1160 Tapscott Rd, Unit 2, Scarborough ON

காலம்: 15 November 2025 3.30PM -7.00PM

கனடா நாட்டில் எமது தமிழர்களின் இருப்பு என்பது ஒன்று அவசியமானது. எதிர்கால எமது சமூகத்தின் விடிவுக்காக நாம் இணையவேண்டியது காலத்தின் கட்டாயம். ஒவ்வொரு ஊர் சங்கங்களின், தமிழ் அமைப்புகளின் நிதி பங்களிப்புகளில், செயற்பாடுகளில் தான் எமது தமிழ் சமூகத்தின் முன்னேற்றமும் எதிர்காலமும் தங்கியுள்ளது. இது ஒரு இனத்துக்கான முதலீடு. ஒன்றிணைவோம் வென்றெடுப்போம். இந்நிகழ்வில் கலந்து கொண்டு உங்கள் ஆலோசனைகளை வழங்குமாறு, எமது மண்ணின் எதிர்கால தூண்களான மாணவர்களையும், கனடா வாழ் மாதகல் மக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். **தொடர்புகளுக்கு:**

(647) 403-1203 (416) 282-0947 (416) 904-2844 (416) 816-0956


GM TOURS & TRAVELS
CHIANG MAI (THAILAND),
LAOS,CAMBODIA, VIETNAM,
BALI (INDONESIA) & MALAYSIA
$6699
Jan 16 to Feb 07, 2026
23 days tour!
6 countries
All Tours are All Inclusive
(Ticket, Breakfast, Lunch, Dinner, Transportation and Entering Fees)
* Travel Insurance Not Included * Visa for the countries not included
IT'S TIME TO TRAVEL
Call Or Whatsapp
BALAN: 647-657-0848
atoz_balan@yahoo.com
Book Before NOV 20th - 2025
Deposite - 70%
DESTINATIONS COVERD
Chiang Mai, Chiang Rai, Siem Reap,
Phnom Penh, Laos,Hanoi, Halong Bay,
Sapa, Bali, Malaysia
The tours will be departuring from and arriving at Toronto Pearson Airport


Radha
Since 1972
RADHA AUTO
வங்கியால்
உடமைப்படுத்தப்பட்ட
வாகனங்களை
விற்பது
எமது விசேடத்திறன்
RADHA
416.412.3838
We sold Austin Cambridge & Morris Oxford in Sri Lanka
We are selling Lexus, Mini Vans, Honda & Toyota in Canada
மிகத் தரமான
கார்களை, குறைந்த விலையில்,
நாணயமான சேவையுடன் வாங்கிட
ஒருமுறை அழையுங்கள்...
2250 Markham Road
Scarborough ON M1B 2W4
(Markham & Finch)


TK DESIGN STUDIO
Architecture | Interior | Graphics
Our Services
• Architectural Design & Solutions
• Interior Design & Material Selection
• Graphic Designing (Posters, Invitations, Video Ads)
• 2D Planning & 3D Visualization
• Resume & Logo Design
Contact: Tel: +1(942) 380-1165
Email: tkdesignstudio03@gmail.com
Instagram: @tkdesignstudio1


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
32
வருட சேவைகள்
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடகு!
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
PAWNBANK INC.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# இவ்வார ராசிபலன்

**07-11-2025 வெள்ளி தொடக்கம் 13-11-2025 வியாழன் வரையும்**

ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'



**"ஜோதிட மகரிஷி"**
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**மேஷம்:** எதிரிகள் உதிரியாகக்கூடிய வாரம். செயல் திறமை வெளிப்படும். உடல்நலனில் அக்கறை தேவை. விருந்தினர் வருகை உண்டு. உத்தியோக இடமாற்றம் ஏற்படும். புதிய நட்பு உருவாகும். வாகன செலவு ஏற்படும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. மகான்களின் சந்திப்பு கிட்டும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஆலோசனை பலன் தரும். குடும்ப கௌரவம் உயரும். அலைச்சல் அதிகரிக்கும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். பதவி உயர்வு கிட்டும். கண் நோய் வந்து போகும். திடீர் திருப்பம் ஏற்படும். கன்னிப்பெண்களிடம் கவனம் தேவை. புதிய நட்பு உருவாகும். மனைவியால் மரியாதை உயரும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். வெறுப்புகள் அகலும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். உத்தியோக உயர்வு கிட்டும். பால் தானம் பாக்கியம் சேர்க்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். பெரிய வாயப்புகள் தேடி வரும். பணியில் ஆர்வம் ஏற்படும். கடன்சுமை குறையும். விருப்பமான தொழில் அமையும். குடும்ப பாசம் அதிகரிக்கும். தனலாபம் கூடும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர்கள். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். மற்றவரிடத்தில் மரியாதை உயரும். பக்குவமான பேச்சு பயன் தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பெரியோர்களை அனுசரித்து செல்வது நல்லது. வழக்கு முடிவுக்கு வரும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க வேண்டும். தன்னம்பிக்கை துளிர்விடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆறுமுக பெருமான், அதிர்ஷ்ட எண்: 8,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,H




**ரிஷபம்:** மனம் எதிர்பார்த்த வளர்ச்சி கிட்டும் வாரம். திறமைகள் வெளிப்படும். பணியில் உயர்வு கிட்டும். ஆறுதலான சூழ்நிலை அமையும். கடல் கடந்த பயணம் உண்டாகும். உடன் பிறப்புக்களால் உதவி கிட்டும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். வங்கி சேமிப்பு உயரும். அனுகூலம் கிட்டும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். கஷ்ட காலம் மறையும். பணிவும், துணிவும் கூடும். உற்சாகம் அலைமோதும். இடமாற்றம் உண்டு. தொழில் மேன்மை உண்டு. பயணத்தடை ஏற்படும். வேலை வாய்ப்புக் கூடும். ஆலோசனை பலன் தரும். அணிகலன் தரும். பணப்பிரச்சனை தீரும். புதிய எண்ணம் நிறைவேறும். கல்வியில் ஈடுபாடு அதிகரிக்கும். கட்டிடத்தொழில் லாபம் தரும். பதவி வாய்ப்பு வரும். முயற்சிகள் பலன் தரும். பொன், பொருள் சேரும். விருப்பங்கள் நிறைவேறும். வருத்தங்கள் மறையும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். முயற்சிகள் வெற்றி தரும். பெருமைகள் உயரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். பொறியியல் துறை லாபம் தரும். தோற்றப் பொலிவு கூடும். எதிரிகள் பலம் குறையும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். நட்பு வட்டம் விரிவடையும். இரகசியம் காப்பது நல்லது. அரசு வகை காரியங்கள் ஆதாயம் அளிக்கும். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். பங்குச்சந்தையில் லாபம் பெருகும். நீண்ட தூரப்பயணம் லாபம் தரும். ஜீவராசிகளுக்கு உணவு அளித்தால் யோகப் பலன் கூடும். பணப்புழக்கம் சரளமாகும். பகை மறையும். கணவன், மனைவி உறவு தித்திக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பூமாதேவி, அதிர்ஷ்ட எண்: 3,1,6,9
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,S




**மிதுனம்:** பணவரவு அதிகரிக்கும் வாரம். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மனநிம்மதி அதிகரிக்கும். கடன் தொல்லைகள் குறையும். பங்குச்சந்தையில் கவனம் தேவை. குடும்ப அன்யோன்யம் கூடும். மாற்று யோசனை பலன் தரும். விளையாட்டுத்துறையில் ஆர்வம் கூடும். வரவுகள் திருப்தி தரும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். சொத்துப் பிரச்சனை தீர்வு ஏற்படும். பெண்களுக்கு பெருமை சேரும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். நட்டமில்லாமல் திட்டங்கள் நிறைவேறும். குடும்பத்தில் குழப்பம் நீங்கும். புத்திரர் வகையில் சந்தோஷம் கூடும். பெருமைகள் கூடும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை அதிகரிக்கும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து போகும். பொருளாதாரம் உயரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூர தொடர்பு லாபம் தரும். தெளிவான முடிவுகள் உதயமாகும். எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும். உத்தியோகத்தில் நற்பெயர் கிடைக்கும். தெம்பும், தைரியமும் கூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப்போடுங்கள். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகள் கோரிக்கைகள் நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. மனதில் மகிழ்ச்சி கூடும். புத்தி சாதுர்யம் கூடும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். சிக்கனம் தேவை.
வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: 6,2,1,7
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,C




**கடகம்:** விரக்திகள் மறையும் வாரம். தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். அரசியல்வாதிகளுக்கும், கலைஞர்களுக்கும் ஆதாயம் பெருகும். வழக்குகள் சாதகமாகும். வரவுகள் பெருகும். அன்னிய தேசப் பயணம் உண்டு. காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். கடன் வசூலாகும். கல்வியில் மேன்மை உண்டு. வியாபாரத்தில் கவனம் தேவை. புத்தி சாதுர்யம் பெருகும். புதிய நட்பு உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். வெளியூர் பயணம் உண்டு. உடல் நலனில் அக்கறை தேவை. பிள்ளைகளின் தொல்லைகள் ஒழியும். பணவரவு சுமாராக இருக்கும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு. நவகிரஹ அனுகிரஹம் கூடும். ஞாபகத் திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். நண்பர்கள் உதவி கிட்டும். புதிய முயற்சி கைக்கூடும். இல்லத்தில் அமைதி கூடும். வார்த்தைகளில் நிதானம் தேவை. காதல் கைக்கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். தொட்ட காரியம் ஜெயமாகும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். இனம் புரியா சந்தோஷம் குடிகொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பெரியோர்களின் வாழ்த்துக் கிட்டும். மதிப்பும், மரியாதையும் உயரும். பொது வாழ்வில் புகழ் கூடும். திருமண முயற்சி பலன் தரும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். பங்குச்சந்தை லாபம் தரும். எதிரிகள் விலகி செல்வார்கள். கால்நடைகளால் லாபம் கிட்டும். புதிய நண்பர்களை சந்திப்பீர்கள். அரசு வழியில் கவனம் தேவை.
வழிபட வேண்டிய தெய்வம்: கருட பகவான், அதிர்ஷ்ட எண்: 5,4,1,3
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,S




**சிம்மம்:** சொந்தங்களால் மனநிறைவு கிடைக்கும் வாரம். பெருமைகள் கூடும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். நீண்டநாள் பிரச்சனை முடிவிற்கு வரும். அரசியல் ஆதாயம் தரும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். வேலைபளு அதிகரிக்கும். உதவிகள் கிட்டும். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும். நல்லோர்களின் பாராட்டு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பங்குச்சந்தையில் லாபம் அதிகரிக்கும். உண்மைகள் வெளிப்படும். பூமி வாங்கும் யோகம் உண்டு. பெண்களுக்கு சுபசெய்தி வரும். தொல்லைகள் ஒழியும். நினைத்த காரியம் நிறைவேறும். ஆடை, அணிகலன்கள் சேரும். மனச்சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கைத் தேவை. பழையக் கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. மருத்துவச் செலவு குறையும். எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும். கோதுமை தானம் குல விருத்தி சேரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். புதிய நண்பர்களால் தகுதிகள் மேம்படும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. சாதனையான காலம். எதார்த்தமாக செயல்படவும். பக்குவமான பேச்சு பயன் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: குபேர பகவான், அதிர்ஷ்ட எண்: 3,2,1,9
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,A




**கன்னி:** புகழும், புண்ணியமும் கிடைக்கும் வாரம். கலைத்தொழில் திருப்தி ஏற்படுத்தும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். கமிஷன் தொழில் லாபம் தரும். கட்டிடத்தொழிலில் கவனம் தேவை. புதிய முதலீடு உருவாகும். கற்பனை வளம் அதிகரிக்கும். கௌரவம் உயரும். கடன் தொல்லை தீரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பகையாளிகளின் நிலை மாறும். பெண் வழி பிரச்சனைகள் முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும். வராத கடன் வந்து சேரும். நன்மைகள் நாடி வரும். பணவரவு உண்டு. கமி'ன் தொழிலில் லாபம் தரும். பயணத்தால் லாபம் கூடும். பேச்சில் நிதானம் தேவை. பிள்ளைகளால் பலன் உண்டு. ஆலோசனைகள் பலன் தரும். காதல் கைக்கூடும். விவசாயிகள் பயன் பெறும் காலம். வாகன செலவு ஏற்படும். விருந்தினர்கள் வருகை உண்டு. பிள்ளைகள் வழியில் செலவுகள் ஏற்படும். உடல்நலனில் அக்கறை தேவை. அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். திடீர் செலவு ஏற்படும். நன்மைகள் அதிகமாகும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வியாபாரம் லாபம் தரும். பாராட்டுக்கள் அதிகமாகும். வெற்றிகள் குவியும். ஆண்கள் அதிகாரம் உயரும். பெரியோர்களின் ஆதரவு பெருகும். புதிய முயற்சிகளை தள்ளிப்போடவும். விளையாட்டுத் துறையில் கவனம் தேவை. வாழ்க்கையில் பிடிப்பு அதிகரிக்கும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் குதூகலம் ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 8,1,4,5
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,H




**துலாம்:** தொட்டது துலங்கும் வாரம். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். சுறுசுறுப்பு பெருகும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. கணவன் மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும். தாய் வழி உறவில் விரிசல் ஏற்படும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். சாமார்த்தியமாக செயல்படுவீர். தாய்ப்பாசம் அதிகரிக்கும். பாகப்பிரிவினை ஏற்படும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். மாணவர்களுக்கு படிப்பில் எச்சரிக்கை தேவை. வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். ஊக்கம் அதிகரிக்கும். சேமிப்பு உயரும். புதுமைகள் நிறைந்த காலம். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். ஆபரணச் சேர்க்கை உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். அந்நிய தேசப்பயணம் உண்டு. புதிய பொருள் சேர்க்கையுண்டு. சூழ்நிலைகள் சாதகமாகும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். வாழ்வில் வசந்தம் கூடும். கணவன், மனைவி அன்யோன்யம் குறையும். விறுவிறுப்பான காலம். உடல்பொலிவு கூடும். எதிர்பார்த்த உதவியால் ஏற்றம் உண்டு. வரம் தரும் தெய்வங்களை வழிபட வேண்டும். எடுத்த முயற்சி வெற்றி பெறும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அரசமரப்பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 6,9,7,2
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,J

*(தொடர்ச்சி ___ பக்கம்)*



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1171

## (வரலாறும் மரபும்)

## பஉவதவஉத்தினி சமேத பசுபதீஸ்வரஉ திருக்கோயில்

### (பருத்தித்துறை சிவன் கோயில்)

### புலோலி, பருத்தித்துறை

மூன்று நிலைகளிலே, பதி கடவுளையும், பசு ஆன்மாவையும் குறிக்கின்றது. பசுவாகிய ஆன்மா இறைவனை அடைய மூன்றாவது நிலையாகிய மும்மலங்களான ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றிலிருந்து விடுபட வேண்டும். உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம் என்பதற்கமைய, ஆன்மாவும், கடவுளும் ஒன்றென்ற அமைப்பில், பசுபதீஸ்வரர் திருவுருவம் போற்றப்படுகின்றது. இவ்வாறான தொன்மையான திருவுருவத்தை மூலமூர்த்தியாக அமைக்கும்படி வாக்கு அருளிய சுவாமிகள் சிறந்த சித்தர் என்பதில் ஐயமில்லை. இத்தகைய திருவுருவத்தை மூலமூர்த்தியாகக் கொண்ட ஆலயங்கள் அருமையாகவே காணப்படுகின்றன.

சுவாமிகள் வாக்கிற்கமைய சிவாலயமாகக் கட்டப்பட்ட இவ்வாலயத்திலே, மூல மூர்த்திகளாக பர்வதவர்தனி சமேத பசுபதீஸ்வரர் காணப்படுகின்றார். இக்கோயிலின் தலவிருட்சமாக, ஆரம்பகாலத்தில் சுவாமிகள் தங்கியதாகக் கருதப்படும் கொன்றைமரம் போற்றப்படுகின்றது. இவ்வாலயம் அகன்ற மூன்று வீதிகளைக் கொண்டதாக விளங்குகின்றது. இங்கு தினமும் திருப்பள்ளி எழுச்சி, உஷத்காலம், காலசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்தசாமம் என ஆறுகாலப்பூசைகளும் நடைபெறுவது வழக்கம்.

இவ்வாலயத்தின் மகோற்சவம், அம்பாளுக்கும், சிவனுக்கும் வேறு வேறு திதிகளிலே ஆரம்பமாகி நடைபெறும். சிவனின் வருடாந்த உற்சவம், ஆனி உத்தரத்தை இறுதி நாளாகக் கொண்டு பத்து நாட்கள் நடைபெறும். அம்பாளின் வருடாந்த மகோற்சவம், ஆடிப்பூரத்தை இறுதிநாளாகக் கொண்டு பத்துநாட்கள் நடைபெறும். வருடாந்த உற்சவத்தின் தேர்த் திருவிழாவின்போது, கட்டுத் தேரே உலாவருகின்றது. இவற்றோடு பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இடம்பெறும், மாமாங்கத்தீர்த்த உற்சவம் மிகவும் சிறப்பானது. மாமாங்கத்தீர்த்த தினத்திலே பர்வவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர், பருத்துறைக் கடற்பகுதிக்கு எழுந்தருளி, அங்கு விசேட தீர்த்தம் இடம் பெறும்.

இவ்வாலயத்தில் நடைபெறும் விசேடபூசைகள், திருவிழாக்கள் போன்ற திருநாட்களில், தேவாரம் பாடுவதற்கென்று ஓதுவார்கள் காணப்படுகின்றனர். ஆலயத்தின் அலங்கார வேலைப்பாடுகள் மற்றும் பூமாலை கட்டும் வேலைகளை,
குறிப்பிட்ட ஒரு பரம்பரையினர் நீண்ட காலமாகச் செய்து வருகின்றனர். சமயப்பணிகளோடு சமூகத்திற்குகந்த பல்வேறு பணிகளை ஆலயங்கள் செய்ய வேண்டும். இதற்கமைவாக இங்கு அம்பாள் பெயரில் அமைக்கப்பட்டுள்ள பர்வதவர்த்தினி கலாமண்டபத்திலே, திருமண வைபவங்கள், சமூக, கலை கலாச்சார நிகழ்வுகள் மற்றும் அன்னதானத் திருப்பணிகள் என்பன சிறப்பாக நடைபெறுவதுண்டு. அத்தோடு கொடுக்கக் கொடுக்கக் குறையாத அறிவுச் செல்வத்தை வழங்கும் வகையில், பிரத்தியே நூல் நிலையம் ஒன்றும் ஆலயம் சார்ந்ததாக அமைக்கப்பட்டுள்ளது. இந்நூ லகத்திலே சமயம் மற்றும் பல்துறை சார்ந்த நூல்கள் காணப்படுகின்றன. இவ்வாலயத்தில், பல தடவைகள் திருப்பணிவேலைகள் நடைபெற்று, கும்பாபிஷேகமும் சிறப்பாக நடைபெற்றுள்ளது. 2005 ஆம் ஆண்டு இவ்வாலயத்தின் உள்வீதிகள் புனரமைக்கப்பட்டதோடு, மணிக்கூட்டுக் கோபுரமும் நிறுவப்பட்டது.

இவ்வாலயம் ஆரம்பிக்கப்பட்ட காலந்தொட்டு, பரம்பரையாக தனிநபர் ஒருவரின் பரிபாலனத்திலேயே இயங்குகின்றது. ஆயினும், இப்பிரதேசத்திலே வாழும் மக்கள் சிவன்மீது கொண்ட ஆராத பக்தியினால், வயற்காணிகளை மானியமாக வழங்கியதோடு, மடங்களை கட்டவும் உதவியுள்ளனர். இவ்வாறு வழங்கப்பட்ட வயற்காணிகளிலிருந்து பெறப்படும் அரிசியைக் கொண்டே, இவ்வாலயத்திற்குரிய அமுது செய்யப்படுகின்றது. இவ்வூர் மக்கள், இவ்வாலய முன்னேற்றத்தில் கொண்ட அக்கறையினால், ஆலயத்திற்குரிய சுவாமி எழுந்தருளுவதற்குரிய, வாகனங்களையும் அன்பளிப்புச் செய்துள்ளனர்.

ஆகமமுறைப்படி எழுப்பப்பட்ட இக்கோயிலின் திருவூஞ்சல் பாடல்களை, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் பாடியிருப்பதிலிருந்து, இக்கோயிலின் பெருமை புலப்படுகின்றது. பலதுறைகளிலும் புகழ்பெற்றவராக விளங்கிய திரு. வீரமணி ஐயர் அவர்கள், பசுபதீஸ்வரர்மீது பல பாடல்களைப் பாடிப் போற்றியுள்ளார். இவ்வாலயத்தின்மீது பண்டிதர் வித்துவான் கிருஷ்ணபிள்ளை அவர்களால், புலோலி பதிற்றுப் பத்ததந்தாதி பாடப்பட்டுள்ளது. அவ்வாறே



திருமதி. ச. பத்மாசனி அம்மா அவர்கள், புலோலி பசுபதீஷ்வரர் பதிற்றுப் பத்தந்தாதியும், திருவாளர். சிவசம்புப் புலவர் அவர்களால் முத்துக்குமாரசாமி திருவூஞ்சலும் பாடப்பட்டுள்ளன.

புலோலி என்னும் பெயர் புலவர் - ஒலி என்ற கருத்தாழம் மிக்கதாகக் காணப்படுவதற்கமைய, இப்பிரதேசத்திலே சான்றோர்களும், பல்கலைக்கழகப் பேராசிரியர்களும், புலவர்களும், கவிஞர்களும் தோன்றி, இவ்வூரை அறிவு வளத்ததால் செழிக்கச் செய்துள்ளனர். யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த சிங்கை ஆரியச் சக்கரவர்த்திகளால், இவ்வூர்ப் புலவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறான பெருமைகள் பல கொண்ட புலோலியில் எழுந்தருளி, பர்வதவர்த்தினி சமேத பசுபதீஸ்வரர் அருள்பாலித்து வருகின்றார்.

ஆய்வு நூல் வெளியீடு அழைப்பிதழ்







Dr. புட்பா கிறிட்டி Ph.D. அவர்கள் எழுதிய
"நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் தமிழ், சமய, சமூகப்பணிகள்"

காலம் : நவம்பர் 16, 2025, ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மாலை 6 மணி
இடம் : புனித ஆரோக்கிய மாதா ஆலய மண்டபம்
(Our lady of Good Health)
131 Birchmount Rd. Toronto, ON, M1N 3J7
(Birchmount and Danforth Avenue)

அன்புடையீர், வணக்கம்.

எனது முனைவர் பட்ட ஆய்வினை தமிழ் அறிஞர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் புகழினை உலகிற்கு உணர்த்தும் வகையில் அதனை ஒரு இலக்கியமாக படைத்துள்ளேன். அதன் வெளியீட்டு விழாவினை சிறப்பாக கொண்டாட உங்களை அன்புடன் அழைக்கின்றேன்.

இப்படிக்கு அன்புடன்
முனைவர். புட்பா கிறிட்டி
மற்றும் வெளியீட்டு விழாக் குழுவினர்

தொடர்புகளுக்கு : 647 703 5538

# இவ்வார ராசிபலன்

(___ பக்கம் தொடர்ச்சி)




**விருச்சிகம்:** சாதனைகள் படைக்கும் வாரம். பெண்களுக்கு யோகம் கூடும். காதலர்களுக்கு கசப்பு நீங்கும். கடன்சுமை குறையும். கனவுகள் பலிதமாகும். கௌரவம் உயரும். தாய்வழி தகராறு குறையும். வாகனத்தால் செலவு ஏற்படும். பிள்ளைகளால் தொல்லைகள் அதிகரிக்கும். சொத்துக்களால் வில்லங்கம் விலகும். எண்ணங்கள் பலிதமாகும். ஆண்களுக்கு அதிகாரம் உயரும். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். கனிவான பேச்சு அவசியம். கலைகளில் ஆர்வம் கூடும். மனைவி அன்பு அதிகரிக்கும். புது முயற்சிகள் பலன் அளிக்கும். மருத்துவச் செலவு குறையும். பேச்சில் நிதானம் தேவை. விரயங்கள் கூடும். பயணங்களால் பலன் தரும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். திடீர் மாற்றங்கள் நிகழும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். பழையக் கடன் வசூலாகும். உத்தியோக உயர்வு உண்டு. ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மதிநுட்பம் மாபெரும் வெற்றி தரும். நட்பு வட்டம் விரிவடையும். கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். பொருளாதாரம் உயரும். கௌரவம் கூடும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். பிரச்சனைகள் முடிவிற்கு வரும். மாற்று மருத்துவம் பலன் தரும். உடல்நலம் சீராகும். வியாபாரம் சுமாராக இருக்கும். ஊதிய உயர்வு கிட்டும். அலைச்சல்கள் அதிகரிக்கும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். திருப்தி பெருகும். நிர்வாகச் செலவுகள் கூடும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். தேக ஆரோக்கியம் மிளிரும். தொழில் அபிவிருத்தி ஏற்படும். மாணவர்கள் பாராட்டு பெறுவர். சந்தோஷம் பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 7,4,9,1
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,F




**தனுசு:** பொறுப்புக்களும், சிறப்புக்களும் சேரும் வாரம். பெற்றோர்களின் ஆசி கிட்டும். உஷ்ணம் அதிகரிக்கும். பொருளாதார உயர்வு ஏற்படும். காரியம் இழுபறியாகும். அரசு வழியில் கவனம் தேவை. பழிச்சொல் தேடி வரும். முயற்சி பலன் தரும். நண்பர்கள் கவனம் தேவை. கல்விச்செலவு உண்டு. உறவினர் வருகை உண்டு. உலோகத்தொழில் உயர்வு தரும். இடமாற்றம் ஏற்படும். குடும்பப் பாசம் அதிகரிக்கும். முயற்சி பலன் தரும். முடிவுகள் சாதகமாகும். உறவுகளால் நன்மை உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு. காதலில் மோதல் உண்டு. ஆதலால் கவனம் தேவை. உணவு பிரியம் அதிகரிக்கும். பாராட்டு பெருகும். புதிய தொழில் அமையும். வீண் விரயம் அதிகமாகும். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். சஞ்சலம் மறையும். வேண்டாத விஷயங்கள் விலகும். பணியாட்கள் தொல்லை ஏற்படும். வாகனச் செலவு உண்டு. பாதகம் விலகும். தோல்விகள் விலகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். பொருள்சோதம் தரும். கல்வி மேன்மை தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழையக்கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைத்தது நிறைவேறும். அரசாங்க அனுகூலம் உண்டு. வீடு, மனை யோகம் உண்டு. பிரார்த்தனை நிறைவேறும். மாணவர் திறமை பளிச்சிடும். தந்தையால் நலம் பெருகும். அறிவாற்றல் பளிச்சிடும். புதிய பதவிகள் கிட்டும். தன்னம்பிக்கை கூடும். வேண்டாத நபர் விலகுவர். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். புண்ணிய ஸ்தல பயணம் ஏற்படும். காரியம் கைகூடும். வாகன அபிவிருத்தி உண்டு. எந்திர தொழில் லாபம் தரும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஶ்ரீகாளிதுர்க்காதேவி, அதிர்ஷ்ட எண்: 3,9,1,5
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,E




**மகரம்:** கன்னியமான புண்ணியங்கள் சேரும் வாரம். பதவி உயர்வு ஏற்படும். பக்குவமான பேச்சு அவசியம். கூட்டுத்தொழில் மோசடி ஏற்படும். உடல் உபாதை தோன்றும். வியாபார விரயம் கூடும். குழந்தைகளால் குதூகலம் கூடும். வழக்கு வெற்றி தரும். பயணம் ஆதாயம் தரும். தொழில் வழி தொல்லை குறையும். சுய பலம் கூடும். பொறுப்புக்கள் கூடும். கணவன், மனைவி வேறுபாடு அகலும். சலசலப்பு குறையும். உடல்நலனில் கவனம் தேவை. பற்றாக்குறை நீங்கும். சகோதாரிளால் சஞ்சலம் ஏற்படும். காதல் எண்ணம் உருவாகும். முத்தான வாய்ப்பு பெருகும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கடன் சுமை குறையும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். குடும்பச் செலவு அதிகரிக்கும். நோய் நொடிகள் அகலும். சேய் நலம் கூடும். பயணம் தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு வேலை பளு கூடும். பயணங்களால் பணம் கரையும். கண் சம்பந்தமான நோய் வந்து நீங்கும். பாக்கிகள் வசூலாகும். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் வீடு தேடி வரும். பணிவான பேச்சுக்கள் தேவை. மனக்கசப்பு வந்து நீங்கும். வீடு, மனை ஆசைகள் நிறைவேறும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். புதிய கடன் வாங்க நேரிடும். வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். கலைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் சாதகமான காலம். சகோதரியினால் நன்மை உண்டு. களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிரபஞ்ச கடவுள், அதிர்ஷ்ட எண்: 7,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,N




**கும்பம்:** பங்குச்சந்தையில் லாபம் தரும் வாரம். சச்சரவுகள் அகலும். உடல்நலம் மேம்படும். கணவன், மனைவி உறவு மேம்படும். கணினி துறையில் ஊதிய உயர்வு கிட்டும். நலமும், நன்மையும் பெருகும். ஆரோக்கியம் சீராகும். சூழ்ச்சிகளிலிருந்து விடுபடுவீர். மங்கள நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவீர்கள். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. வங்கி சேமிப்பு உயரும். விருந்தினர் வருகை உண்டு. பயணம் வெற்றி தரும். மாணவர்களுக்கு மகிழ்ச்சியான காலம். இனிப்பான செய்திகள் வரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். முதலீடுகளில் முன்னேற்றம் உண்டு. பணப்புழக்கம் அதிகரிக்கும். மனநெருக்கடிகள் தீரும். மனமகிழ்ச்சி கூடும். மேன்மையான காலம். விவேகமான பேச்சுக்கள் குறையும். வீண் வம்பு அகலும். தந்திரமாக செயல்படுவீர்கள். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சித் தரும். சொத்துக்களால் லாபம் தரும். சுறுசுறுப்பு பெருகும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். பெற்றோர்களின் அன்பு கூடும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. உறவினர் பகை ஏற்படும். வார்த்தைகளில் நிதானம் தேவை. வாழ்க்கையின் பிடிப்பு அதிகரிக்கும். பெண்களுக்கு அணிகலன் சேரும். யோகப் பலன் கூடும். வம்பு வழக்குகள் தீரும். எண்ணங்கள் வண்ணமயமாகும். பாராட்டுக்கள் கூடும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். வருமான திருப்தி தரும். புது முயற்சிகளை தள்ளிப் போடவும். பெருமிதம் நிறைந்த காலம். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மனநிம்மதி அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பார்வதிதேவி, அதிர்ஷ்ட எண்: 5,2,1,3
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,Z




**மீனம்:** சாதனை படைக்கும் காலம். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உறவுகளால் செலவு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். புதுமுயற்சிகள் பலன் தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பழைய பாக்கி வசூலாகும். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். கல்வியில் ஆர்வம் கூடும். கடன் சுமை குறையும். பருப்பு தானம் பாவம் போக்கும். முத்தான வாய்ப்புக்கள் பெருகும். எதிலும் வெற்றி கிட்டும். பணம் புரளும். ஏற்றம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். வாழ்க்கைத்துணையால் வளம் பெருகும். கடன் பாக்கிகள் வசூலாகும். வரவுகள் திருப்தி தரும். வாகன யோகம் உண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகாரம் குவியும். ஆபத்துக்கள் விலகும். பயண முயற்சி பலன் தரும். நினைத்த விஷயம் நிறைவேறும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். பாதகமான சூழ்நிலை விலகும். உடல்நலம் கவனம் தேவை. பிள்ளை வழிச் செலவுகள் அதிகரிக்கும். மெத்தனப்போக்கு விலகும். ஞாபக மறதி ஏற்படும். பேச்சில் நிதானம் தேவை. திருமண வாய்ப்பு கூடி வரும். உடல் உபாதை அதிகமாகும். குடும்ப ஒற்றுமை நிறையும். குதூகலம் அதிகமாகும். மனோபயம் நீங்கும். மருத்துவச் செலவு குறையும். கனவுத்தொல்லை உண்டு. நிதி நிலைமை சீராகும். எதிர்மறை எண்ணம் உருவாகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பிணிகள் நீங்கும். பல்வலி வந்து நீங்கும். பெண்களின் கௌரவம் உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குருபகவான், அதிர்ஷ்ட எண்: 1,4,9,8
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,B

# தமிழ் படிப்போம்

*தமிழ் படிப்போம்*
*அன்னைத் தமிழை அழிக்காதே!*
*அதன் ஆணிவேரை அறுக்காதே!*
*பொன்னைப் போலக் காப்போமே!*
*பண்ணும் பரதமும் கற்போமே!*

*தைப்பொங்கல் செய்வதை மறக்காதே!*
*தமிழ்ப் பண்பாட்டை புதைக்காதே!*
*பிள்ளைகள் தமிழ்கற்க மறுக்காதே!*
*பிறந்த பொன்நாட்டை ஒறுக்காதே!*

*மேலோர் கீழோர் பார்க்காதே!*
*மேன்மைத் தமிழை வெறுக்காதே!*
*மதங்கள் வேறாய் இருந்தாலும்*
*மங்காத் தமிழில் இணைவோமே!ஷ*

*ஆடலும் பாடலும் இனத்தின் மாட்சி*
*அவற்றை மறந்தால் எமக்கு வீழ்ச்சி*
*தலைமைப் பண்பை வளர்த்திடுவாய்*
*தலைவனாய் நிமிர்ந்து நின்றிடுவாய்*

*எத்தனை மொழியும் கற்றுக்கொள்*
*எம்தமிழை முதலாய் ஏற்றுக்கொள்*
*தமிழைத் தாழ்வாய் நினைக்காதே!*
*தாயின் கருவைப் பழிக்காதே!*

*உந்தன் மண்ணைத் தொட்டிடேன்*
*எந்தன் மண்ணை விட்டிடேன்*
*எல்லா மொழியும் வாழட்டும்*
*எம்தமிழே எம்மை ஆளட்டும்*

*தமிழை நீயேன் படிக்க வேண்டும்?*
*தாய்ப்பால் ஏன் உன்பிள்ளை குடிக்கவேண்டும்?*
*தாய்ப்பால் குடித்தால் உன்பிள்ளை உரம்பெறும்*
*தமிழைப் படித்தால் எம்மொழி வளம்பெறும்..*

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
*(416) 844-7453*

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND · INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal



CALL US

# NESAN
# 416-908-5656

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164

Matt Mathisayan
Sales Representative
647 268 9219
905 201 9977
905 201 9929
mattmathisayan@gmail.com
Follow me on
HomeLife/Future Realty Inc.
7 Eastvale Dr #205, Markham, On L3S 4N8

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எங்களுடன்
தொடர்பு கொள்ளவும்.
416 752 1524

உதயம் 1544 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday November 7, 2025

# கம்போடியாவில் நடைபெறும் "கடாரம் கொண்டான்" ராஜேந்திர சோழன் மன்னரின் 1000வது ஆண்டு விழாக் கொண்டாட்டத்திற்கு வாழ்த்துத் தெரிவித்துள்ள கனடாவின் பாராளுமன்ற உறுப்பினரும் உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சருமான ஹரி ஆனந்தசங்கரி



எதிர்வரும் நவம்பர் மாதம் 22ம் 23ம் திகதிகளில் கம்போடியா தேசத்தில் அங்குள்ள சவுத் ஈஸ்ட் ஏசியா பல்கலைக்கழகமும் அங்கோர் தமிழ்ச் சங்கமும் இணைந்து நடத்தும் "கடாரம் கொண்டான்" ராஜேந்திர சோழன் மன்னரின் 1000வது ஆண்டு விழாக் கொண்டாட்டம் மற்றும் சிறப்பு மாநாடு ஆகிய வரலாற்றுச் சிறப்பு மிக்க தமிழர் விழாக்களுக்கு கனடாவின் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினரும் உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சருமான ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

## Roundtable Discussion with the Sri Lankan Bisuness Delegation' hosted in Scarborough, by Canada -Sri Lanka Business Convention

# கனடா – இலங்கை வர்த்தக நட்புறவுக் கழகத்தின் எற்பாட்டில் ஸ்காபுறோவில் நடைபெற்ற இலங்கையின் வர்த்தக தூதுக்குழுவினருடனான வட்டமேசை கலந்துரையாடல்

கனடா வாழ் வர்த்தகப் பிரமுகர்களான திரு கணேசன் சுகுமார் மற்றும் குலா செல்லத்துரை ஆகியோரை முக்கிய இயக்குனர்சபை உறுப்பினர்களாகக் கொண்ட கனடா-இலங்கை வர்த்தக நட்புறவுக் கழகத்தின் எற்பாட்டில் இம்மாதம் 3ம் திகதி திங்கட்கிழமையன்று காலை தொடக்கம் மாலை வரை ஸ்காபுறோவில் நடைபெற்ற இலங்கையின் வர்த்தக தூதுக்குழுவினருடனான வட்டமேசை கலந்துரையாடல்யுடன் மற்றும் கருத்துப் பரிமாற்றங்கள் மற்றும் விருந்துபசாரம் ஆகியன சிறப்பாக நடைபெற்றன.

காலை தொடக்கம் நடைபெற்ற இந்த பயனுள்ள வர்த்தகக் கலந்துரையாடல்களில் கனடாவிலும் இலங்கையிலும் வர்த்தகத் துறையில் வெற்றிகரமாக பயணிப்பவர்களும் அத்துடன் கனடாவிலும் இலங்கையிலும் தங்கள் வர்த்தக முதலீடுகளைக் கொண்டு வர்த்தகத்தை விரிவுபடுத்த விரும்புகின்றவர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டார்கள். (தொடர்ச்சி 17ம் பக்கம்)



## PATHWAY TO WELLENESS CLINIC successfully celebrates the Grand Opening of it's newest location.

# ரொறன்ரோ வாழ் மக்களால் நன்கு அறியப்பெற்ற PATHWAY TO WELLENESS CLINIC நிலையத்தின் புதிய சிகிச்சை நிலையத் திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது.



கடந்த பல வருடங்களாக கென்னடி-பின்ச் சந்திப்பிற்கு அருகில் இயங்கிவந்த, ரொறன்ரோ வாழ் மக்களால் நன்கு அறியப்பெற்றதும் டாக்டர் நெலன்ரைன் யேசுதாசன் அவர்களை தலைமை வைத்தியராகக் கொண்டதுமான **'PATH-WAY TO WELLENESS CLINIC** நிலையத்தின் புதிய சிகிச்சை நிலையத் திறப்பு விழா கடந்த 2ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று மார்க்கம் நகரில் சிறப்பாக நடைபெற்றது.

7595 **Markham Road Unit 19 Markham -L3S 0B6** என்னும் விலாசத்தில் அமைந்து சிகிச்சை வளாகத்தின் திறப்பு விழாவிற்கு மார்க்கம்-தோர்ன்ஹில் தொகுதியின் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்டார். (தொடர்ச்சி 7ம் பக்கம்)

# ரொறன்ரோவின் PARAGON Security Ltd பாதுகாப்பு நிறுவனம் அங்கு நீண்ட காலம் பாதுகாப்பு உத்தியோகத்தராகப் பணியாற்றிய கதிர் துரைசிங்கத்தின் சேவையை கௌரவித்தது

கனடாவில் 38 வருடங்கள் பாதுகாப்பு உத்தியோகத்தராக பல நிறுவனங்களில் பணியாற்றியும் அதில் 15 வருடங்களை **PARAGON Security Inc.** பாதுகாப்பு சேவை நிறுவனத்திலும் பணியாற்றியமைக்காக கடந்த ஒக்டோபர் 24ம்

திகதி அங்கு நீண்ட காலம் பாதுகாப்பு உத்தியோகத்தராக பணியாற்றிய கதிர் துரைசிங்கம் அவர்களின் சேவையையும் அவரது அர்ப்பணிப்பான கடமையுணர்வையும் பாராட்டிக் கௌரவித்தது.

(தொடர்ச்சி 9ம் பக்கம்)



தமது நற்சேவையினால் தமிழ் மக்களின்
உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan
Broker
Joy H.Selvanayagam
Broker